பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆடி 15 புதன்கிழமை (31-07-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:248

# பயங்கரவாத இயக்கங்களாக 7 குழுக்களை கனடா அறிவிப்பு!

## பாக்.அதிபருக்கு பலத்த பாதுகாப்பு



இன்று இலங்கைக்கு விஜயம் செய்யும் பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் முஷாரப்புக்கு பெரும் வரவேற்பு காத்திருக்கிறது. பிற்பகல் 1.30 மணியளவில் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடையும் அவரை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேரில் வரவேற்பார்.

விமான நிலைய வரவேற்பை அடுத்து பாகிஸ்தான் ஜனாதிபதி கொழும்புக்கு வாகனப் பவனியில் அழைத்து வரப்படுவார். இதற்காக கட்டுநாயக்கா - கொழும்பு வீதியின்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



...நடிப்பிலும் கிண்டலடிப்பிலும் 'அம்மா' கில்லாடிதான்...

## மீனவருக்கு அச்சுறுத்தல்

குருநகர்,ஜூலை31

குடாக்கடலில் மீன்பிடித்துவிட்டு கரை நோக்கித் திரும்பிக்கொண்டிருந்த மீனவர் ஒருவர் நேற்று கடற்படையினரால் அச்சுறுத்தப்பட்டதாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிரஸ்தாப மீனவர் வழமையாக மீன்பிடிப்பதற்கு குடாக்கடலுக்குச் சென்று திரும்பும்போது பல தடவைகள் கடற்படையினர் அவரை வழிமறித்து இறால் தருமாறு வற்புறுத்தி வந்ததாகவும் -

ஆனால், படையினருக்கு இறால் வழங்க அவர் மறுத்துவந்தார் என்றும் -

கூறப்படுகிறது.

நேற்று அந்த மீனவர் தொழில் முடிந்து திரும்பியசமயம், கடற்படையினர் அவரை வழிமறித்து அச்சுறுத்தியதாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3-51)

## புலிகள் அமைப்பின் பெயர் அந்தப் பட்டியலில் இல்லை

வான்கூவர்,ஜூலை31

**பயங்கரவாத அமைப்புகளாக முத்திரை குத்தி ஏழு இயக்கங்களின் பெயர்ப்பட்டியலை கனடா வெளியிட்டிருக்கின்றது. அந்த 7 அமைப்புகளும் இஸ்லாமிய தீவிரவாதக் குழுக்கள் ஆகும்.**

**தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பெயர் இந்தப் பட்டியலில் இடம்பெறவில்லை.**

ஒஸாமா பின்லேடனின் வலை அமைப்பான 'அல்-ஹெய்டா', அல்ஜீரியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் மேற்குலக எதிர்ப்புக் குழுவான 'ஆயுத இஸ்லாமியக் குழு'(ஜியா), ஜியாவில் இருந்து பிரிந்துசென்ற அமைப்பான 'அழைப்புக்கும் யுத்தத்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## மந்திரி சபைக்குச் சிலர் 'மப்பில்' வருகிறார்கள்!

### ஜனாதிபதி குற்றச்சாட்டு

அமைச்சரவை நாகரிகம் சிலருக்குத் தெரியாது. அமைச்சரவைக்குக் குடிபோதையில் வருகிறார்கள். கடிதம் எழுதத்தெரியாதவர்கள்கூட அமைச்சரவைக்கு வருகிறார்கள். இவர்களெல்லாம் அரசுத் தலைவர்களாம்!

- இவ்வாறு கடந்த ஞாயிறன்று அத்தனகலையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு பேசிய ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க கிண்டலடித்தார். அவர் அங்கு பேசுகையில் மேலும குறிப்பிட்டதாவது:-

நான் தனி ஒரு கட்சியைப் பற்றிப பேசவில்லை. சகல அரசியல் கட்சிகளையும் பற்றித்தான் கூறுகிறேன். அநேகமான இடங்களில் இப்படியானவர்களே உள்ளனர். இந்நாட்டின் பல அரசியல் வாதிகள் (14 ஆம் பக்கம் பார்க்க)

## தங்கவடிவேல் எம்.பியின் வீட்டை தாக்குவதற்குச் சிலர் முயற்சி!

### மெய்க்காவலர்கள் சூட்டு 6பேர் காயம்

காத்தான்குடி,ஜூலை31

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.தங்கவடிவேல் இல்லம் மீது தாக்குதல் நடத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆறு இளைஞர்கள் இம்முயற்சியில் ஈடுபட்டனர் எனக் கூறப்பட்டது. எம்பியின் மெய்ப பாதுகாவலர்கள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் அவர்கள் காயமடைந்தனர்.

திங்கள் இரவு 11.30 மணியளவில் இச்சம்பவம் நடந்தது. காயமடைந்த இளைஞர்கள் மட்டக்களப்பு போதனாவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## 100 முச்சக்கர வண்டிகளை ராணுவம் புலிகளின் பிரதேசத்துக்கு அன்பளிப்பு

கொழும்பு,ஜூலை31

இலங்கை - ஜப்பான் நட்புறவுக் கழகத்தினால் இலங்கை இராணுவத்துக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட 250 முச்சக்கர வண்டிகளில் நூறு வண்டிகளை வன்னியில் ஊனமுற்ற புலிகளுக்கும், பொதுமக்களுக்கும் நன்கொடையாக வழங்க இராணுவம் முன்வந்துள்ளது.

நேற்று கொழும்பில் புனர்வாழ்வு அமைச்சில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் இந்த 250 முச்சக்கர வண்டிகளையும் நட்புறவுக் கழகத்தினர் ஒப்படைத்தனர். இராணுவத்தின் வேண்டுகோளுக்கு இணங்க அவற்றில் நூறு

(14 ஆம் பக்கம் பார்க்க)

## தட்சணாமருதமடு முக்கொலைகள்: விசாரணைக்கு ஒத்துழைப்பு கோருகின்றது காவல்துறை



கிளிநொச்சி,ஜூலை31

தட்சணாமருதமடுவில் தென்னிலங்கையைச் சேர்ந்த மூவரின் சடலங்கள் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைக்கு சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று தமிழீழ காவல்துறை கேட்டிருக்கிறது.

இது தொடர்பாக காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் விடுத்த பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

25-07-2002 அன்று தமிழீழ காவல் துறையின மன்னார் காவல்பணிமனைக்கு 'தட்சணாமருதமடுக்குள காட்டுப்பகுதியில் மூன்று இனந்தெரியாத சடலங்கள்' இருப்பதாக பொதுமக்கள் கொடுத்த தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து (2 ஆம் பக்கம் பார்க்க)

## எழுவைதீவில் புலிகளுக்கு உணர்வுபூர்வ வரவேற்பு

### வெடி கொளுத்தி மக்கள் ஆரவாரம்

ஊர்காவற்றுறை,ஜூலை31

பன்னிரெண்டு ஆண்டுகால இடைவெளிக்குப் பின்னர் நேற்றுக் காலை எழுவைதீவு சென்ற விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளுக்கு அங்கு மக்கள் வெடிகள் கொளுத்தி உணர்வுபூர்வமாக வரவேற்பு அளித்தனர்.

தீவக அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன், ஊர்காவற்றுறை அரசியல்துறைப் பொறுப்பாளர் [illegible] நெடுந்தீவு அரசியல்துறைப் [illegible] பாளர் கண்ணன் ஆகியோர் உட்பட 13 போராளிகள் நேற்று முற்பகல்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் மீனவர்கள் தாக்கப்பட்டனர்!

### வெள்ளியன்று இரவு சம்பவம்

யாழ்ப்பாணம்,ஜூலை31

வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு ஆகிய கடற்பிரதேசங்களில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் கடற்படையினரின் தாக்குதலுக்கு இலக்காகியிருப்பதாகக் கூறப்படுகிறது.

இத்தாக்குதல் கடந்த வெள்ளியன்று இரவு இடம்பெற்றுள்ளதாக தாளையடி கடற்றொழிலாளர் [illegible] யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு முறைப்பாடு செய்துள்ளது.

அன்று இரவு 10.30 மணியளவில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிய விளையாட்டுப் போட்டிக்கு யாழ். நகரிலிருந்து ஒலிம்பிக் தீபம்

### இன்று காலை எடுத்துச்செல்லப்படும்

யாழ்ப்பாணம்,ஜூலை31

எதிர்வரும் 9 ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாகவிருக்கும் 14 ஆவது ஆசிய மெய்வன்மைப் போட்டிகளில் ஏற்றுவதற்கான ஒலிம்பிக் தீபம் இன்று யாழ்ப்பாணத்தில் இருந்து எடுத்துச் செல்லப்படவிருக்கின்றது.

இது தொடர்பான வைபவம் இன்று காலை 8.30 மணிக்கு யாழ்.பிரதான பஸ் நிலையப் பகுதியில் இடம்பெறும்.

பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்திய இசையுடன் விளையாட்டு ஆர்வலர்கள் இந்த ஒலிம்பிக் தீபத்தை கொழும்புக்கு அனுப்பிவைப்பர்.

யாழ்அமெச்சூர் மெய்வன்மைச் சங்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதிகளை நடத்துவோர் முன் அனுமதி பெறவேண்டும்

### யாழ். மேயர் கண்டிப்பான உத்தரவு

யாழ்ப்பாணம்,ஜூலை31

யாழ்மாநகர சபை எல்லைப் பரப்பினுள் பொது இடங்களில் விளம்பரப் பலகைகளை நடுவதாயின் அதற்கு சபையின் முன்அனுமதி பெறவேண்டும். நகரப் பகுதிக்குள் விடுதிகளை நடத்துவோரும் மாநகரசபையின் அங்கீகாரத்தை பெற்றிருக்க வேண்டும்.

யாழ்மாநகர மேயர் செல்லன் கந்தையன் இவ்வாறு கண்டிப்பான உத்தரவு விடுத்திருக்கிறார்.

யாழ்.நகரிலும் நகரை அண்டிய பகுதிகளிலும் பெரிய அளவிலான விளம்பரப் பலகைகள், பனர்கள் நிறுவப்பட்டு வருகின்றன. அத்துடன் மூலைமுடுக்கு எங்கும் பயணிகள் விடுதிகள் திறக்கப்பட்டுள்ளன.

(2ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டைக் காக்க முப்படைகளும் உஷாராக இருக்கவேண்டும்!

### 'வீரவிருது' வழங்கும் நிகழ்வில் ஜனாதிபதி

கொழும்பு,ஜூலை31

சமாதான வழிமுறைகள் மூலம் நாட்டைப் பாதுகாக்கும் பொறுப்பு முப்படைகளிடமும் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. சமாதானத்தை அடைவதற்கு முயற்சி எடுக்கப்படுகின்ற போதிலும் நாட்டைப் பாதுகாப்பதற்கு படையினர் உஷாராக இருக்கவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற, படையினருக்கு 'வீரவிருது' வழங்கும் நிகழ்வில் ஜனாதிபதி உரையாற்றினார். அவர் அங்கு கூறியதாவது -

ஆயுதப் படையினரின் தலைமைத தளபதியாக இருக்கும் நானும், பிரதம மந்திரியும், அரசும் நாட்டின் பாதுகாப்புக்குத் தேவையான எதனையும் செய்வதற்கு தயாராக இருக்கிறோம்.

முன்னைய அரசுகள் யுத்தத்துக்கு அரசியல் தீர்வு காண முயற்சி செய்

(2 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# வைகோவை பெர்னாண்டஸ் சென்று சந்தித்தது நியாயமா?

## இந்திய நாடாளுமன்றில் அமளிதுமளி

புதுடில்லி,ஜூலை31

'பொடா' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள வைகோவை இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் சிறையில் சென்று சந்தித்த விவகாரத்தால் இந்திய நாடாளுமன்றத்தில் நேற்று அமளி துமளி ஏற்பட்டது.

அ.தி.மு.க, காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகளின் உறுப்பினர்கள் இது விடயத்தில் வரிந்துகட்டிக்கொண்டு குரல் எழுப்பினர்.

"இந்திய நாட்டுக்கும் இராணுவத்துக்கும் துரோகம் இழைத்தவர்கள் புலிகள். அவர்களுக்காகக் குரல் எழுப்பியதற்காக வைகோ கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரைப் பாதுகாப்பு அமைச்சர் போய் சந்திப்பது இராணுவத்தின் முதுகில் குத்தும் வேலையாகும்; அது நாட்டுக்குச் செய்யும் துரோகமும் கூட" - என்று அவர்கள் சத்தமிட்டனர்.

பெர்னாண்டஸின் நடவடிக்கைக்கு ஆதரவாக ம.தி.மு.க. மற்றும் பாரதிய ஜனதா உறுப்பினர்கள் குரல் எழுப்பினர்.

பெர்னாண்டஸின் நடவடிக்கையை நியாயப்படுத்தி துணைப் பிரதமர் அத்வானி உரைநிகழ்த்தினார்.

"சிறையில் இருக்கும் ஒருவரை அமைச்சர் சென்று சந்திக்கக்கூடாது என்று எந்தச் சட்டத்திலும் எழுதப்பட்டிருக்கவில்லை. சிறையில் இருக்கும் எம்.பி. ஒருவரை அவருடைய சக எம்.பி. சென்று பார்ப்பதற்கு முழு உரிமையும் உண்டு. தனது தனிப்பட்ட நட்புக் காரணமாகவே பெர்னாண்டஸ் வைகோவைச் சந்தித்துள்ளார். இதன்மூலம் யாருக்கும் பெர்னாண்டஸ் துரோகம் செய்துவிடவில்லை" - என்றார் அத்வானி. (ஐ)

# விளையாட்டு



வெற்றியை நோக்கிய களிப்பில் இலங்கை அணியினர்

## முதலாவது பந்துவீச்சில் விக்கெட் வீழ்த்திய கமகே

இலங்கை அணி வேகப் பந்துவீச்சாளர் சமில கமகே டெஸ்ட் கிரிக்கெட்டில் தனது முதலாவது பந்துவீச்சிலேயே விக்கெட்டைக் கைப்பற்றியுள்ளார்.

எஸ்.எஸ்.ஸி. மைதானத்தில் நடைபெறும் பங்களாதேஷ் அணியுடனான இரண்டாவது போட்டியில் இச்சாதனையைப் படைத்தார் கமகே.

பங்களாதேஷ் வீரர் மொஹமட் அஷ்ரபுல் போல்ட் முறையில் ஆட்டமிழந்தார். இவர் கடந்த வருடம் எஸ்.எஸ்.ஸி. மைதானத்தில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் சதம் குவித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகில் ஏற்கனவே 12 வீரர்கள் இச்சாதனையைப் புரிந்துள்ளனர். எனினும் இச்சாதனைக்குரிய முதலாவது இலங்கையர் கமகே ஆவார்.

23 வயதான கமகே, காலி ரிச்மண்ட் கல்லூரி முன்னாள் மாணவர் ஆவார். தற்போது விமானப்படை வீரராகப் பணியாற்றுகிறார். தனது சாதனை குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில் -

"எனது மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதற்கு வார்த்தைகள் இல்லை. டெஸ்ட் அணியில் இடம்பெறுவதற்கு நான் நீண்டகாலமாகக் காத்திருந்தேன். இப்போது அதற்குப் பலன் கிட்டியுள்ளது" - என்றார். (ஐ)

## பங்களாதேஷ் அணியுடனான டெஸ்டில் வண்டோர்ட், நவாஷ் அபார துடுப்பாட்டம்

பங்களாதேஷ் அணியுடனான 2 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி வீரர்களான மைக்கல் வண்டோர்ட், நவீட் நவாஷ் ஆகியோர் அபாரமாகத் துடுப்பெடுத்தாடினர்.

எஸ்.எஸ்.ஸி. மைதானத்தில் நடைபெறும் இப்போட்டியில் பங்களாதேஷ் அணி தனது முதல் இன்னிங்ஸில் 164 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. நேற்றைய ஆட்ட முடிவில் பங்களாதேஷ் இரண்டாவது இன்னிங்ஸில் 103 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்திருந்தது.

இலங்கை அணி தனது முதல் இன்னிங்ஸில் 373 ஓட்டங்களைப் பெற்றது. நேற்று இரண்டாவது இன்னிங்ஸை ஆட ஆரம்பித்த இலங்கை அணி, 263 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளை இழந்திருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.



மைக்கல் வண்டோர்ட்

வெற்றி பெறுவதற்கு 473 ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில் ஆட்டத்தை ஆரம்பித்த பங்களாதேஷ் அணி, ஆட்டநேர முடிவில் 4 விக்கெட் இழப்பிற்கு 103 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

மைக்கல் வண்டோர்ட் 16 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 140 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ரல்கா ஜுபைரியினால் 'போல்ட் அவுட்' செய்யப்பட்டு ஆட்டமிழந்தார். நவீட் நவாஷ் ஆட்டமிழக்காமல் 78 ஓட்டங்களைப் பெற்றார். ஜெஹறன் முபாரக் 31 ஓட்டங்களைப்பெற்று ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தார். (ஐ-9)

# பஸ் கொள்வனவுப் பிரச்சினையே மருதமடு கொலைகளுக்குக் காரணம்

## உடன்சென்ற 11 பேர் கைது; திட்டமிட்டவர் வவுனியா சங்கராம்

வவுனியா,ஜூலை31

தட்சணாமருதமடுவில் தென்னிலங்கையைச் சேர்ந்த மூவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக 11 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் மூவர்சீதுவைப் பகுதியையும் எண்மர் நீர்கொழும்புப் பகுதியையும் சேர்ந்தவர்கள். இக்கொலைகள் திட்டமிடப்பட்டவை என்பது பொலீஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்திருக்கிறது.

கொடுக்கல் வாங்கல் குறித்து ஏற்பட்ட ஒரு பிரச்சினையால் வவுனியாவைச் சேர்ந்த சங்கர் என்பவர் இக்கொலைகளுக்கு திட்டமிட்டிருக்கலாம என்று சந்தேகிக்கப்படுகின்றது. பஸ் ஒன்றைக் கொள்வனவு செய்வது தொடர்பாக கண்டிப் பகுதியைச் சேர்ந்த - தற்போது கொலையுண்டுள்ள - நபருக்கு இந்த சங்கர் என்பவர் பணம் கொடுத்திருந்தார் என்று விசாரணைகள் தெரிவிக்கின்றன. கண்டியிலிருந்து அந்த பஸ் வண்டியிலேயே அனைவரும் மடுவுக்குச் சென்றிருக்கின்றனர்.

சங்கர் தற்போது தலைமறைவாகியுள்ளார். கொலையுண்ட மூவருடன் வேறு 13 பேர் உடன் சென்றிருந்தனர். அவர்களில் 11 பேரே தற்போது கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

காணாமற்போன இரண்டு பேர் பற்றி இன்னமும் தகவல் இல்லை. கைது செய்யப்பட்டவர்கள் நேற்று மாலை வவுனியாவுக்கு அழைத்து வரப்பட இருந்தனர். (ஐ)

## இந்திய மீனவர்களின் படகுகள் வடமராட்சிக் கடலில் ஆக்கிரமிப்பு

### உள்ளூர் கடற்றொழிலாளர் பாதிப்பு

வடமராட்சி,ஜூலை31

வடமராட்சிக் கடற்பிரதேசத்தில் இந்திய மீனவர்களின் அச்சுறுத்தல் காரணமாக அப்பிரதேச மீனவர்கள் நேற்றுமுன்தினம் இரவு மீன்பிடிக்கச் செல்லவில்லை - என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்திய மீனவர்கள் பெரும் எண்ணிக்கையில் பாரிய றோலர்களில் வந்து வடமராட்சிக் கடற்பரப்பில் தொழில் ஈடுபட்டு வருவதாகவும் -

இதனால் தமது மீன்பிடித் தொழில் பாதிக்கப்பட்டிருப்பதுடன் வலைகளும் நாசமாவதாக வடமராட்சி மீனவர்கள் கவலை தெரிவித்தனர்.

இந்திய மீனவர்களின் அச்சுறுத்தல் காரணமாக நேற்றுமுன்தினம் மீனவர்கள் தொழிலுக்குச் செல்லவில்லை என்று வடமராட்சி மீனவர் சங்கங்கள் தெரிவித்தன.

இது விடயமாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு முறைப்பாடு செய்யவிருப்பதாக மீனவர் சங்கங்கள் தெரிவித்துள்ளன. (ஐ-3)

## விளையாட்டு விழா

பிரான்பற்று ஸ்ரீ முருகன் முன்பள்ளி பாடசாலை வருடாந்த விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு பிரான்பற்று கலைமகள் வித்தியாசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் வலி-தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் வெ.அ.ஜோனசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ-3)

## நாட்டைக் காக்க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருக்கின்றன. தற்போதைய அரசின் சமாதான முயற்சிகளை வரவேற்கின்றேன். நாட்டின் சகல சமூகங்களினதும் உரிமைகளைப் பாதுகாக்கும் அரசியல் தீர்வு நாட்டுக்கு மிக அவசியம். யுத்தம் காரணமாக சுமார் 50 ஆயிரம் மக்கள் உயிரிழந்திருக்கிறார்கள். இத்தகைய அழிவு தடுக்கப்பட வேண்டும் என்பதே எல்லோருடைய விருப்பமுமாகும். இத்தருணத்தில் எல்லோரும் புத்திசாதுரியத்துடன் நடந்துகொள்ள வேண்டும் - என்றார் ஜனாதிபதி.

நேற்று நடைபெற்ற இவ்வைபவத்தில் படையினருக்கு 'வீரவிருது'கள் ஜனாதிபதியினால் வழங்கப்பட்டன. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், முப்படை அதிகாரிகள் உட்படப் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (ஐ-9)

## பயங்கரவாத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துக்குமான சலாவிஸ்ட் குழு', எகிப்தில் முபாரக் ஆட்சியை அகற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ள 'அல்ஜிகாத்', அந்த அமைப்புடன் நெருக்கமான தொடர்புடைய 'வெற்றிக்கான முன்னணிக் காவலர்கள் அமைப்பு', எகிப்தில் உல்லாசப் பயணிகள் மற்றும் அரச அலுவலர்கள் மீதான தாக்குதல்களோடு தொடர்புடையதாகக் கருதப்படும் 'அல் காமா அல் இஸ்லாமியா', சோமாலியா மற்றும் எதியோப்பியா ஆகிய இடங்களில் இயங்கும் 'அல் இடிகாட் அல் இஸ்லாம்' ஆகியனவே தற்போது தடைசெய்யப்பட்டுள்ள இயக்கங்களாகும்.

இந்த இயக்கங்களோடு கனடா பிரஜைகள் எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்ளக்கூடாது என்று எச்சரிக்கப்படுகின்றார்கள். இந்த அமைப்புகளின் சொத்துக்கள் கையகப்படுத்தப்படும். இவை கனடாவில் இயங்கினால் கடும் தண்டனையை எதிர்நோக்கவேண்டி நேரும். இவற்றுடன் தொடர்புபடும் பிரஜைகள் சிறைவாசத்தை அனுபவிக்க நேரும்.

- இப்படி கனடா அறிவித்துள்ளது.

ஐ.நா. மொத்தம் 240 தனிக்குழுக்களை பயங்கரவாத அமைப்புகளாக அறிவித்திருக்கும்போது ஆக 7 அமைப்புகளை மட்டும் கனடா அரசு பயங்கரவாத அமைப்புகளாக தேர்ந்தெடுத்தது என எதிர்க்கட்சிகள் விமர்சித்துள்ளன.

வேறு பயங்கரவாத அமைப்புகளும் தற்போது கனடாவில் இயங்குகின்றனவா என்பதை கனடா அரசு பகிரங்கப்படுத்தத் தவறிவிட்டதாகவும் அவை குற்றம் சுமத்தின.

மேலும் சில இயக்கங்களின் பெயர்கள் பயங்கரவாதப் பட்டியலில் இடம் பெறவிருப்பதாகவும், அதன் விவரம் விரைவில் வெளியாகும் எனவும் கனடா நாட்டின் சொலிஸிட்ட ஜெனரல் லோறன்ஸ் மக்கோல் தெரிவித்தார் என்று 'வன்கூவர் சன்' பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது. (ஐ)

### மண்டூர் சூட்டுச் சம்பவம்

## பொலீஸாருக்கு இடமாற்றம்; காயமடைந்தோருக்கு நஷ்டஈடு

களுவாஞ்சிக்குடி,ஜூலை31

மண்டூரில் பொதுமக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து விரும்பத்தகாத சூழலை உருவாக்கிய பொலீஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும். இவர்கள் உடனடியாக இடமாற்றம் செய்யப்படுவர். காயமடைந்த பொதுமக்களுக்கு நஷ்டஈடு வழங்கவும் ஏற்பாடு செய்யப்படும் என களுவாஞ்சிக்குடி உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் ஆனந்த நாணயக்கார நேற்று உறுதியளித்தார்.

மண்டூர் அசம்பாவிதங்களைத் தொடர்ந்து அங்கு ஏற்பட்ட பதற்ற நிலையைப் போக்கும் வகையில் பொலீஸ் - பொதுமக்கள் ஒன்றுகூடல் ஒன்று நேற்று மண்டூர் முருகன் ஆலய முன்றிலில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஆயிரத்திற்கு மேற்பட்ட பொதுமக்களும், நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.கிருஷ்ணபிள்ளை, புலிகளின் பிரதேச உறுப்பினர்கள் மற்றும் பிரதேச அபிவிருத்திச் சபை உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

நேற்றுமுன்தினம் பொலீஸார் நடந்துகொண்ட விதம் பற்றிப் பொதுமக்கள் உதவிப் பொலீஸ் அத்தியட்சகரிடம் விளக்கிக் கூறினர்.

எக்காரணம் கொண்டும் பொலீஸார் சீருடையின்றி பொதுமக்கள் மத்தியில் நடமாட அனுமதிக்கப்படமாட்டார்கள். இதற்கான கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது எனவும் உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் கூறினார். (ஐ)

## விடுதிகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக மாநகர மேயர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ்.மாநகராட்சிமன்ற எல்லைப் பரப்புக்குள் ஒரு விளம்பரப்பலகையினை நாட்டுவதாயின் எமது மன்றத்தின் உரிய அங்கீகாரம் பெறப்படவேண்டும். அவ்வாறு அங்கீகாரம் பெறப்பட்டு விளம்பரப்பலகைகளை நடுவதே நடைமுறையாகும்.

ஆனால், பல விளம்பரப்பலகைகள் சட்டவிரோதமாக பல இடங்களில் பொருத்தப்பட்டுள்ளன. அவற்றை உடனடியாக அவரவர்களை அகற்றும்படி கேட்டுக்கொள்கின்றேன். இதனை மீறும் பட்சத்தில் நாமாகவே அவற்றை அகற்றுவோம் என்பதைத் தங்களின் கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன்.

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் பல விடுதிகள் எமது சபையின் அங்கீகாரம் இல்லாது இயங்குவதாக அறிகிறேன். இவற்றை நடத்துவதற்கான அங்கீகாரம் எமது சபையிடம் பெற்ற பின்னர்தான் நடத்த முடியும் என்பதை தங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன்.

இதனை மீறி நடத்துபவர்களுக்கு உரிய ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளேன் என்பதையும் அறியத்தருகின்றேன்.

எனவே, இவ்விடுதிகளின் உரிமையாளர்கள் உடனடியாக எமது சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன். (ஐ)

## விசாரணைக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்ற காவல்துறையினர் ஆரம்ப விசாரணையினை மேற்கொண்டனர். இதனையடுத்து மேலதிக விசாரணையினை மேற்கொள்வதற்காக தமிழீழ காவல்துறையின் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அங்கு அனுப்பிவைக்கப்பட்டனர். குற்றப்புலனாய்வுப் பிரிவின் மன்னார் காவல்பணிமனையுடன் இணைந்து செயற்பட்டதில் மூன்று சடலங்களும் சிங்கள இனத்தவர்களது என இனங்கண்டதுடன் தமிழீழ சட்டக்கோவையின் பிரகாரம் விசாரணையினை மேற்கொண்டனர்.

சம்பவ இடத்துக்கு தமிழீழ மாவட்ட நீதிமன்ற நீதியாளரும் சென்று பார்வையிட்டதுடன் காவல்துறையினரை தொடர் விசாரணையினை மேற்கொள்ளுமாறும், கண்டெடுக்கப்பட்ட சடலங்களை உரியவர்களிடம் ஒப்படைக்குமாறும் பணிப்புரை வழங்கினார்.

தொடர் விசாரணையின்போது சந்தேகத்தின்பேரில் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். நீதிமன்றின் அனுமதியுடன் அவர் தொடர்ந்தும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு தொடர் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் போது கொலைசெய்யப்பட்டவர்கள் பயணம் செய்ததாகக் கருதப்படும் மினிபஸ் வாகனம் ஒன்றும் தமிழீழ காவல்துறையினரால் மன்னார் காட்டுப் பிரதேசமொன்றிலுள் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவமானது தமிழீழ தாயக பிரதேசத்தின் தமிழீழ மாவட்ட நீதிமன்றின் மன்னார் பிரதேச நியாயாதிக்க எல்லைக்குள் இடம்பெற்றிருப்பதால் தமிழீழ சட்டக்கோவையில கூறப்பட்டுள்ள விதிகளுக்கமைவாகவே துரித விசாரணையினை தமிழீழ காவல்துறையினர் மேற்கொண்டுள்ளனர்.

இக்கொலையுடன் சம்பந்தப்பட்ட நபர்கள் இலங்கைத்தீவின் எப்பகுதியில் இருந்தாலும் அவர்கள் தொடர்பான தகவல்களையோ, சான்றுகளையோ அல்லது சம்பந்தப்பட்ட நபர்களையோ கைதுசெய்து தமிழீழ காவல்துறையின் குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இன, மத, மொழி, பால் வேறுபாடுகளுக்கப்பால் குற்றம் இழைத்தவர்களை சட்டத்தின் முன் கொண்டு வந்து நீதி செலுத்துவதற்கு ஏதுவாக சம்பந்தப்பட்ட நபர்கள் எவராக இருந்தாலும் இவ்விடயத்தில் தமிழீழ காவல் துறையினருக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கியுதவுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் - என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. (ஐ)

# தக்காளி மல்யுத்தம்

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள குயின்சி நகரத்தில் ஆண்டு தோறும் வித்தியாசமான ஒரு போட்டி நடைபெறுகின்றது. அதற்குப் பெயர் தக்காளி மல்யுத்தம். அதற்காகத் தக்காளிகள் மல்யுத்தம் புரியும் என்றெல்லாம் அர்த்தப்படுத்திக்கொள்ளக்கூடாது.

அமெரிக்காவிலேயே இந்தப் பகுதியில்தான் தக்காளி அதிகம் விளைகிறது. அதனைப் பெருமைப்படுத்தத்தான் இந்தத் தக்காளி மல்யுத்தம்



ஆண்டுதோறும் நடத்தப்படுகின்றது. ஒரு பெரிய தொட்டியில் தக்காளிப் பழங்களை நிரப்பிவிட்டு அதற்குள் இரு இளம் பெண்களை இறக்கி மல்யுத்தம் புரிய விட்டுவிடுவார்கள். இதுதான் போட்டி. வெற்றிபெறுபவர்களுக்கு ஆயிரக்கணக்கில் பணப்பரிசு கிடைக்கும்.

இவர்களது மல்யுத்தத்தில் தக்காளிகள் நசிந்து(பிழிந்து) உருவாகும் திரவத்தில் மூழ்கிப்(....?) போகாமல் இருக்க இவர்கள் அணிந்திருக்கவேண்டியது நீச்சல் உடைதான் என்பது போட்டியின் விதி.

இந்த வருடப் போட்டியில் 8 பெண்கள் கலந்துகொண்டனர். அவர்கள் உருண்டு புரண்டு மல்யுத்தம் செய்வதைக் காண ஆயிரக் கணக்கில் பார்வையாளர்கள் திரண்டிருந்தனர்.

## அட அதிசயமே

## இது புதிது

பிரேஸில் நாட்டு விஞ்ஞானிகளான அலெக்ஸாண்டர் கெல்னர், டயா ஜீனிஸ் டி அல்மெய்டா காம் லோஸ் இருவரின் சமீபத்திய கண்டுபிடிப்பு பலரை ஆனந்த அதிர்ச்சியில் உறைய வைத்திருக்கிறது. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த டைனோசரின் உறவு மிருகம் தெரோசர். தெரோசர் போன்று அதே தோற்றத்தையும் உடலமைப்பையும் கொண்ட ஓர் உயிரினத்தை இவர்கள் கண்டுபிடித்துள்ளனர். இதற்கு விஞ்ஞானிகள் வைத்த பெயர் 'தபாசோகுரோமெஸ் சேத்பி' என்பதாகும்.

இந்த அபூர்வ உயிரினத்தின் எலும்புக்கூட்டை இவர்கள் கண்டுபிடித்தது, வடக்கு பிரேசில் அருகே உள்ள சந்தானாபோமேஷன் காட்டுப்பகுதியில். கிட்டத்தட்ட 15 அடி உயரம் கொண்ட இந்த உயிரினத்தின் இறக்கைப் பகுதி மட்டும் 6அடி. நடக்கவும், பறக்கவும் கூடிய பறவை இது என்பது ஆராய்ச்சியில் நிரூபணமாகியிருக்கிறது.

கொண்டை உள்ளிட்ட தலைப்பகுதியே 4 அடி. தலைப் பகுதி கிரீடம் வைத்ததுபோல் இருந்திருக்கவேண்டும். எலும்புக்கூட் அதை உறுதி செய்கிறது. மூக்கு மாதிரி அமைந்து மிரட்டுகிறது. இதுவும் ...டுப் பகுதி கத்தரிக்கோல் டைனோசர் காலத்தில் வாழ்ந்ததுதான் என்பதை எலும்புக் கூட்டு ஆய்வில் உறுதிப்படுத்தி இருக்கிறார்கள்.



இந்த அபூர்வ பறவையினம் நிலத்திலும் நீரிலுமாக இரை தேடும் விதத்தில் இருந்திருக்கக் கூடும் என்பது கணிப்பு. டைனோசரைப் போல இவற்றின் எண்ணிக்கையும் காலப் போக்கில் குறுகி, பின்னர் அருகிப்போயிருக்கவேண்டும் என்பது இவர்கள் எண்ணம்.

## நவீன சுயம்வரம்



மன்னர் ஆட்சிக் காலத்தில் அரச குடும்பத்துப் பெண்கள் தமது துணைவர்களை சுயம் வரத்தின் மூலம் தேர்ந்தெடுத்தார்கள் என்று நாம் அறிந்திருக்கின்றோம். இப்போதும் பல நாடுகளில் இந்த சுயம்வரமுறை பின்பற்றப்படுகின்றது. மொழி, இனரீதியாக இவை நடத்தப்படுகின்றன. இத்தகைய சுயம்வரம் நடத்துவதற்கென்றே கொரியா நாட்டில் பல்வேறு நிறுவனங்களும் அமைப்புகளும் உள்ளன.

இதில் ஒரு நிறுவனம் அண்மையில் புதுமையான சுயம்வரம் ஒன்றை நடத்தியது. அதாவது தமது சுயம்வரத்துக்கு வரும் ஆண்களும் பெண்களும் தங்களுடன் தமது செல்ல நாய்க்குட்டிகளையும் அழைத்து வரவேண்டும் என்று அந்த நிறுவனம் அறிவித்தது. அதுவும் பெண்கள் பெண் நாய்க் குட்டிகளையும் ஆண்கள் ஆண் நாய்க் குட்டிகளையும் கொண்டுவரவேண்டும் – என்று தெரிவிக்கப்படுகிறது.

மனிதர்களின் சுயம்வரத்திற்கு நாய்கள் ஏன் என்று நினைக்கிறீர்களா? அவையும் தமக்கு ஜோடிகளைத் தேடிக்கொள்வதற்காகத்தான். (அடடா என்ன ஒரு கருணை உள்ளம் பாருங்கள்!!)

## கமரா துப்பாக்கி



பார்ப்பதற்கு துப்பாக்கிபோன்று இருக்கும் இது உண்மையில் துப்பாக்கி அல்ல; இது ஒரு கமரா. என்ன ஆச்சரியமாக இருக்கிறதா?

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஆல்பேர்ட் போஸ்சோ என்ற நபர் 1882ஆம் ஆண்டு இதனை வடிவமைத்தார். சாதாரணமாக ரிவோல்வர்களில் உள்ள சன்னம் பொருத்தும் பகுதியிலேயே இந்த கமரா துப்பாக்கிக்கு பிலிம்ரோல் பொருத்தப்படுகின்றது. ஒரே நேரத்தில் 6 படங்களை இதன்மூலம் எடுக்க (சுட) முடியும்.

இதுபோன்ற 6 கமரா துப்பாக்கிகள் அந்தக் காலகட்டத்தில் தயாரிக்கப்பட்டன. ஆனால் அவற்றில் இது ஒன்றுதான் இப்போதும் உருப்படியாக இருக்கின்றது. லண்டனில் உள்ள புகழ் பெற்ற ஏல நிறுவனமான கிறிஸ்டி இந்தக் கமராத் துப்பாக்கியை ஏலம் விடவுள்ளது.



தயாரிப்பு: கனிமொழி

# இன்னுமொரு பூமி


இந்தப் பிரபஞ்சத்தில் எங்காவது உயிரினங்களுடன் கூடிய இன்னுமொரு பூமி இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் திடமாக நம்புகின்றார்கள்.

பிரபஞ்சம் குறித்து ஆய்வு செய்யும் வானியலாளர்களின் நீண்டகால ஆராய்ச்சிகளின் பின்னர் இந்த நம்பிக்கையில் அவர்கள் உறுதியாக இருக்கிறார்கள்.

இந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான் 'இன்டிபென்டன் டே', 'ஸ்ரார் வோர்ஸ்' (Star Wars) போன்ற ஹொலிவூட் படங்கள் எடுக்கப்பட்டு மிகப் புகழ் பெற்றன. இன்னும் எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

எங்காவது; பிரபஞ்சத்தின் எந்த மூலையிலாவது உயிரினங்களுடனான பூமி இருக்கும். அதில் நுண்ணுயிர்கள் மற்றும் சிறிய உயிரினங்கள் இருக்கலாம். ஏன்? மனிதனை விட சற்று அறிவு குறைந்த ஜீவன்களும் இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். "செவ்வாய்க் கிரகத்தில் உயிரினங்கள் வாழ்வதற்கு அடிப்படையான தண்ணீர் நீண்டகாலத்திற்கு முன்னர் நிறையவே இருந்துள்ளது. இப்போதும் அங்கே தண்ணீருக்கான படிமங்கள் இருக்கின்றன. எனவே அங்கு உயிர்கள் இருந்திருப்பதற்கான சாத்தியங்கள் இருக்கின்றன. அதேபோன்று வேறு எங்காவது ஒரு பூமியில் (கோளில்) இன்னும் உயிரினங்கள் இருக்கலாம்" - என்று அண்மையில் ஜேர்மனியில் நடந்த அறிஞர்கள் மாநாட்டில் விஞ்ஞானி ஒருவர் தெரிவித்தார்.

இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானிகள் தரும் தகவல்கள் தான் மிகப் பிரமிப்பை ஏற்படுத்துகின்றன. பிரபஞ்சத்தின் பால் வீதியில் கோடான கோடி கோள்கள் இருக்கின்றன என்றும், அவற்றில் பல கோடிக்கணக்கானவை பூமிகளாக இருக்கலாம் என்றும் கூறுகின்றார்கள் வானியலாளர்கள்.



இந்த விவரங்கள் வான்வெளியில் -நமது சூரிய மண்டலத்துக்கு வெளியே- 100ஆவது கோள் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து வெளியாகியுள்ளன.

கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்த கோள் வாயுமண்டலத்தால் சூழப்பட்டுள்ளது என்கிறார்கள் வானியலாளர்கள். சூரியனில் இருந்து 293 ஒளி ஆண்டுகள் தூரத்தில் இந்தக் கோள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோள் கண்டுபிடிக்கப்பட்டதன் பின்னர் வான்வெளியில் உள்ள கோள்கள் மற்றும் நட்சத்திரங்கள் பற்றிய மதிப்பீடுகளில் வானியலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். இவற்றில் எத்தனை பூமிகளாக இருக்கலாம் என்று மதிப்பிடுவதிலும் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

அவர்களின் இந்த முயற்சியின் பயனாக, அவர்கள் மதிப்பிட்டதன்படி இந்தப் பிரபஞ்சத்தில் சுமார் 30ஆயிரம் கோடி நட்சத்திரங்கள் (300 பில்லியன்) இருக்கின்றன என்றிருக்கிறார்கள். இவற்றில் 3ஆயிரம் கோடி நட்சத்திரங்களை (சூரியன்கள்) பல கோள்கள் சுற்றி வருகின்றன. (சூரியக் குடும்பம் போன்று) இவற்றில் அநேகமான நட்சத்திரங்களைச் சுற்றி வரும் கோள்களில் பூமிகள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

தற்போது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் 100ஆவது கோள், எச்.டி - 2039 (HD 2039) என்று அடையாளமிட்ட நட்சத்திரத்தைச் சுற்றி வருகின்றது. ஆஸ்திரேலியாவில் உள்ள அங்லோ(Anglo) என்ற தொலை நோக்கி மூலம் இது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வானியல் ஆராய்ச்சியில் இந்த 100ஆவது கோளின் கண்டுபிடிப்பு மிக முக்கியமானது என்கிறார் வானியலாய்வாளர் டாக்டர் ஜேன் சஜ்னிடர் (Dr. Jean Schneider) "இது ஒரு மிக முக்கியமானதும் அடையாளப்படுத்தக் கூடியதுமான கண்டுபிடிப்பு. முதற் றடவையாக சூரிய மண்டலத் துக்கு வெளியே குறுகிய தூரத்தில் உள்ள ஒரு கோள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அது குறித்து நாம் மேலும் தகவல்களைச் சேகரித்துக்கொண்டிருக்கின்றோம்" - என்றார் அவர்.

### பிரேம்

வான்வெளியில் உள்ள நட்சத்திரங்கள் ஒவ்வொன்றும் பூமியில் இருந்து குறைந்தது சுமார் 100 ஒளியாண்டுகள் தூரத்தில் இருக்கின்றன என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இவற்றைச் சுற்றிவரும் கோள்கள் மிக நீண்ட தூரத்தில் இருப்பதால் தற்போது உள்ள தொலைநோக்கும் தொலைநுட்பத்தின் மூலம் இவற்றைத் தெளிவாகப் பார்க்கமுடியவில்லை. எனவே, புதிய தொழில்நுட்பம் தேவை என்று தெரிவிக்கின்றனர் வானியலாளர்கள்.

கோள்களின் ஈர்ப்பின் இழுவையினால் தாய் நட்சத்திரத்தில் ஏற்படும் அதிர்வின் அடிப்படையிலேயே தற்போது புதிய கிரகங்கள் கண்டு பிடிக்கப்படுகின்றன. இந்தத் தொழில் நுட்பத்தின் மூலம் சனிக் கிரகத்தின் அளவு அல்லது அதிலும் பெரிதான கிரகங்களையே கண்டுபிடிக்கமுடியும். அவற்றைவிடச் சிறிய - பூமி அளவுள்ள - கோள்களை இந்தத் தொழில்நுட்பத்தின் மூலம் கண்டுபிடிக்க முடியாது. ஏனெனில் இத்தகைய சிறிய கோள்கள் தாய் நட்சத்திரத்தில் ஏற்படுத்தும் அதிர்வு மிகக் குறைந்ததாக இருப்பதால் அதனைக் கண்டுபிடிப்பது இலகுவானதல்ல.

இருந்தாலும் இத்தகைய நட்சத்திரங்களின் பக்கச்சாய்வான அள வீட்டிலும்கூட பூமி போன்ற சிறிய கோள்கள் இலகுவாகத் தெரிகின்றன என்கிறார்கள் வானியலாளர்கள். இதுவே இந்த வான்வெளியில் இன்னும் சில பூமிகள் இருக்கலாம் என்று வானியலாளர்களைச் சிந்திக்க வைக்கிறது. ஆனால், அவை வியாழன் போன்ற சாதாரணமான கோள்களாகவும் இருக்கக்கூடும் என்று அவர்கள் கருதுகின்றனர். இவற்றைத் தெளிவுபடுத்துவதற்கு தற்போதுள்ளதைவிட மேலான தொழில்நுட்ப வசதிகள் தேவை என அவர்கள் தெரிவிக்கின்றனர். அதற்கான முயற்சிகளிலும் அவர்கள் முழு மூச்சுடன் ஈடுபட்டுள்ளனர்.

பூமிக்கு வெளியே வான்வெளியில் பாரிய தொலை நோக்கி ஒன்றை அமைப்பது குறித்தும் அவர்கள் சிந்தித்து வருகின்றனர். இந்த முயற்சிகள் வெற்றி பெற்றால் வான்வெளியில் இருக்கும் [illegible] வானியலாளர்கள் [illegible] லேயே கண்டுபிடித்து [illegible]

# புறா வியாபாரப் பிணக்கு மூவரைப் பலியெடுத்தது!

இளைஞர் ஒருவரின் கொலைக்குப் பழிவாங்கும் முகமாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் நான்கு வீடுகள் தீக்கிரையாகின. இருவர் கொல்லப்பட்டனர். பலர் கத்திக்குத்துக்கு இலக்காகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வெலிகம பகுதியில் புறா விற்பனை தொடர்பாக இடம்பெற்ற வாக்குவாதத்தின் முடிவு கத்திக்குத்தில் முடிந்தது. இதனால் டிஜிரணதுங்க எனும் இளைஞர் கொல்லப்பட்டார்.

இதற்குப் பழிவாங்கும் நோக்குடன் சென்ற கோஷ்டியினரே நான்கு வீடுகளுக்கு தீ வைத்துக் கொளுத்தினர். அங்கு இடம்பெற்ற சரமாரியான வாள் வெட்டில் தந்தையும் மகனுமாக இருவர் உயிரிழந்தனர். காயமடைந்த ஏனையோர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் ஈடுபட்ட கோஷ்டியினரை இனங்கண்டுள்ளதாகவும், அவர்கள் தலைமறைவாகியுள்ளதாகவும் பொலீஸார் தெரிவித்தனர். அக்குரஸ்ஸ உதவி பொலீஸ் அத்தியட்சகர் சோமபால தலைமையில் பொலீஸார் சம்பவம் தொடர்பாக விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர். (ம)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 26 - 04 - 1954



உதிர்வு 01 - 07 - 2002

### அமரர் குணரத்தினம் நம்பிராசா

குடும்பத்தின் குல விளக்காய் இருந்து
உழைத்த உங்கள் உடல் ஓய்வு தேடியதோ?
கலங்கரை விளக்காய் காட்சி தந்த உங்கள் உடல்
கடவுள் இருப்பிடம் தேடியதோ?

எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (31.07.2002) புதன்கிழமை இடம்பெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*சண்டிலிப்பாய் வீதி,*
*பண்டத்தரிப்பு*
(6526)
மனைவி, பிள்ளைகள்.



## அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

- புதிய வர்த்தக உலகிற்குள் உங்களையும் இணைத்துக் கொள்ள..
- மாறி வரும் உலகில் நவீனமடைந்து வரும் பொருட்களை — வழிகளை — சேவைகளை கண்டு களித்து நீங்களும் பயனடைய..
- உங்கள் தேவைகளை குறைந்த செலவில் நிறைவாகப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை அறிந்து கொள்ள...

**யாழ் வியாபாரக் கண்காட்சி**

தினமும் மாலை 7 மணியில் இருந்து
இன்னிசை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்

ஓகஸ்ட்
3ஆம், 4ஆம், 5ஆம்
திகதிகளில்
**யாழ் மத்திய கல்லூரியில்**

அனுசரணை
புனர்வாழ்வு, மீள் குடியமர்வு மற்றும் அகதிகள் அமைச்சு

உடன் கூட்டாக
வடபகுதி புனர்வாழ்வு, மற்றும் மீள் குடியமர்வு அதிகாரசபை

சிடிசி கன்வென்சன்ஸ் (பிரை) லிமிடட்
38, டட்லி சேனாநாயக்க மாவத்தை, கொழும்பு-08, இலங்கை
தொலைபேசி: 674950-51, தொலைநகல்: 674953, 075-332604
மின் அஞ்சல்: jtf@cdcconv.com இணையத்தளம்: www.cdconv.com

உத்தியோகபூர்வ பத்திரிகை உதயன்

Coca-Cola

அழையுங்கள் 072 233275

(C/23070)



## சைக்கிள் என்று கேட்காதீர்கள்
## லுமாலா என்று கேட்டு வாங்குங்கள்!

இலங்கையில் 20 வருடத்திற்கும் மேலாகஅனைவரது மனதிலும் தனக்கென்று ஒரு தனி இடத்தை பெற்றுக்கொண்ட ஒரே ஒரு சைக்கிள் லுமாலா.



அனைத்து உதிரிப்பாகங்களையும் எவ்வேளையிலும் இலங்கையின் எப்பாகத்திலும் தங்குதடையின்றி அனைவரும் பெற்றுக் கொள்ளலாம்.



பத்து வருடகால உறுதியான உத்திரவாதம் அளிக்கப்படும்.

ஐப்பானிய தொழில் நுட்பத்துடனான ஒரே ஒரு சைக்கிள்

10 YEARS WARRANTY Japanese Technology

THE LUMALA CYCLE

Lumala
Bicycles supreme

மேலதிக விபரங்களுக்கு
CITY CYCLE INDUSTRIES
117 & 119 Dam Street, Colombo - 12
Tel : 432745, 433845 Fax : 449478

(C/22897)

# உதயன்

## சட்டரீதியான தீர்வு அவசியம்

அமைச்சர்களை நியமிப்பது மற்றும் விலக்குவது பற்றி முடிவு எடுக்கத் தனக்கு வரையறையற்ற அதிகாரம் இருப்பதாக ஜனாதிபதி எழுத்துமூலம் பிரதமருக்கு மீண்டும் அறிவித்திருக்கின்றார்.

இதே கருத்தைக் குறிப்பிட்டு பிரதமருக்கு ஜனாதிபதி முன்னர் ஒரு கடிதம் வரைந்ததும், தனது கலந்தாலோசனை இல்லாமல் அப்படிச் செயற்படும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை என்பதைத் தெளிவுபடுத்தி அவருக்குப் பிரதமர் பதில் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்ததும் இம்மாதம் மூன்றாம் வாரத்தில் நடந்த சம்பவங்கள்.

பிரதமரின் பதிலை ஏற்காமல் அமைச்சர்கள் நியமனம் மற்றும் விலக்கல் விவகாரத்தில் தனக்கு வரையறையற்ற அதிகாரம் இருப்பதாக மீண்டும் அறிவித்திருப்பதன் மூலம் தனது நிலைப்பாட்டில் தாம் பிடிவாதமாக இருப்பதை ஜனாதிபதி குமாரதுங்க தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

அமைச்சர்கள் நியமனம் என்ற விடயம் நாட்டின் நிர்வாக முறைமையில் மிக முக்கியமான அம்சம். அது வெறும் அரசியல் மோதலுக்குரிய ஒரு கருப்பொருள் அல்ல.

இந்த விவகாரத்தில் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியும், அரசுக்கும் நாடாளுமன்றத்துக்கும் பொறுப்பான பிரதமரும் கருத்து முரண்பட்டு நிற்கின்றனர்.

அரசமைப்புக்கு வியாக்கியானம் செய்வதில் எழுந்துள்ள இந்தப் பிணக்கு மிகவும் பாரதூரமான விளைவுகளை - அரசியல், சட்ட நெருக்கடிகளை - நாட்டுக்கு ஏற்படுத்தக்கூடிய தன்மையுடையது.

இத்தகைய பிணக்குகளுக்கு இரண்டு வழிகளில் தான் தீர்வு காணமுடியும். அதுதான் சரியான நடைமுறையாகவும் இருக்கும்.

நாட்டின் ஜனாதிபதியும் பிரதமரும் அரசமைப்பின் கீழ் தாங்களுக்கு உள்ளதாக - அல்லது தாங்களுக்கு வழங்கப்பட்டிருப்பதாக - தாங்கள் கருதும் அதிகாரம் குறித்து சட்டத்தைத் தாங்களே வியாக்கியானம் செய்வதை விடுத்து, அரசமைப்பையோ, சட்டத்தையோ வியாக்கியானம் செய்யும் தகுதியும் பொறுப்பும் உள்ளவர்களிடமிருந்து ஒரு முடிவைப் பெற்றுக்கொள்வதே முறையானது. அத்தகைய முடிவைப் பெறுவதற்குத்தான் இரண்டு வழிகள் உள்ளன.

ஒன்று - நாட்டுக்கும், ஜனாதிபதிக்கும், அரச நிர்வாகத்திற்கும் சட்ட ஆலோசனை கூறும் பொறுப்புடைய சட்டமா அதிபரின் கருத்தைக் கேட்பது.

மற்றது - அரசமைப்புக்கு வியாக்கியானம் அல்லது பொருள் கோடல் செய்யும் ஏகபோக அதிகாரத்தை அரசமைப்புச் சட்டரீதியாகக் கொண்டிருக்கும் உயர்நீதிமன்றத்திடம் இவ்விவகாரத்துக்கு முடிவு தரும்படி கோருவது.

பிரதமருக்கு, ஜனாதிபதி அனுப்பியுள்ள பிந்திய கடிதத்தில் இவ்விவகாரத்தில் தனக்கு வரையறையற்ற அதிகாரம் இருக்கிறது என்று தமக்கு ஆலோசனை கூறப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். ஆனால், அந்த ஆலோசனையை யார் வழங்கினார்கள் என்பதை அவர் தெளிவுபடுத்தவில்லை.

சட்டமா அதிபர் அந்த ஆலோசனையை வழங்கியிருந்தால் அதில் அதிக அர்த்தம் உண்டு. ஆனால் சட்டமா அதிபர் அப்படி ஆலோசனை ஏதும் வழங்கவில்லை என்றும், அவர் அதற்கு மாறான கருத்தையே கொண்டிருக்கின்றார் எனவும் விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

சரி. சட்டமா அதிபர் ஆலோசனை வழங்கினார் என்று வைத்துக்கொண்டாலும் அவர் வழங்கிய ஆலோசனை தவறானது என ஜனாதிபதி, பிரதமர் ஆகிய இருவரில் யார் ஒருவர் கருதினாலும் சரியான தீர்ப்புக்காக அவர் உயர்நீதிமன்றத்தை நாடக்கூடிய வாய்ப்பும் தற்போது உள்ளது.

அரசமைப்பு ஏற்பாடு ஒன்றுக்கு விளக்கம் அல்லது வியாக்கியானம் தரும்படி தாமாகவே உயர்நீதிமன்றைக் கோரும் அதிகாரம் அரசமைப்பின் கீழ் ஜனாதிபதிக்கு உண்டு.

அதேசமயம், அரசமைப்புச் சிக்கல் தொடர்பாகத் தமக்கு ஜனாதிபதி எழுதிய கடிதங்கள் இரண்டையும் ஆதாரமாக வைத்துக்கொண்டு உயர்நீதிமன்றத்திடம் முறையிட்டு உரிய நிவாரணம் கோரும் வாய்ப்பு பிரதமருக்கு உள்ளது.

எனவே, இருவரும் நாட்டின் மிக முக்கியமான ஓர் அரசியல் நெருக்கடி குறித்து மாறி மாறிக் கடிதம் எழுதி, அவற்றைப் பத்திரிகைகளில் பிரசுரித்து, அதனை கட்சி அரசியலுக்குரிய பிரசாரமாக்காமல், சட்டரீதியில் அப்பிரச்சினைக்குத் தெளிவான முடிவை எட்ட நடவடிக்கை எடுப்பதே பொருத்தமானது.

# வல்வெட்டித்துறை பதுங்குகுழியில் புற்றுநோய்க்கு நவீன ஆஸ்பத்திரி

## அமைக்க மருத்துவ நிபுணர்கள் தீவிர முயற்சி

யாழ்ப்பாணம்,ஜூலை31

அதி நவீன சாதனங்களைக்கொண்டு புற்றுநோய்க்கு சிகிச்சையளிக்கும் வசதியுள்ள மருத்துவமனை ஒன்றை வல்வெட்டித்துறையில் உள்ள பாரிய பதுங்குகுழிக்குள் அமைக்க மருத்துவர்களும், சமூக சேவையாளர்களும் இணைந்து தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

தெல்லிப்பழையில் புற்றுநோய் மருத்துவமனைக்கெனக் கட்டப்பட்ட கட்டடம் உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் அமைந்துள்ளது. தவிரவும் அது தரைக்குமேல் அமைக்கப்பட்ட கட்டடமாகும்.

ஆனால், புற்றுநோய் சிகிச்சைக்கான சாதனங்களில் நவீனமயமானதும், இலங்கையில் வேறிடங்களில் இல்லாததுமான சாதனத்தை குடாநாட்டுக்குக்கொண்டுவர மருத்துவ நிபுணர்களும், சமூகசேவையாளர்களும் இணைந்து கடும்முயற்சி மேற்கொண்டுள்ளனர்.

குறிப்பிட்ட சாதனம் கதிரியக்க வீச்சு அதிகம் கொண்டதாகவும் -

ஆகவே, அதனை நிலத்தடி அறை ஒன்றினுள் வைத்து சிகிச்சை வழங்குவதே முறையென்றும் -

கொழும்பில் இருந்து வந்திருந்த அணுசக்தி நிபுணர்கள் தெரிவித்திருந்தனர்.

இதனையடுத்தே வல்வெட்டித்துறைப் பதுங்குகுழியை புற்றுநோய் மருத்துவமனையாக மாற்றும் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட்ட பின்னர் தெற்கிலிருந்து புற்றுநோய்ப் பாதிப்புக்குள்ளானவர்கள் இங்கு வந்து சிகிச்சை பெறும் நிலை உருவாகும் என்று மருத்துவ வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன.

இத்திட்டம் தொடர்பாக அரசுக்கும், விடுதலைப் புலிகளின் தலைமைக்கும் மற்றும் பொது அமைப்புகளுக்கும் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் -

அனைத்துத் தரப்பினரும் இத்திட்டத்தை வரவேற்றதுடன் இது நிறைவேற பூரண ஒத்துழைப்பை வழங்கத் தயாராக உள்ளதாகவும் -

திட்டத்தை நிறைவேற்றும் முயற்சியில் ஈடுட்டுள்ள மருத்துவ நிபுணர்கள் தெரிவித்தனர். (ஓ)

### போரினால் அழிவுற்ற

## இடங்களை அடையாளப்படுத்த பெயர்ப்பலகை வைக்கலாமே?

### பொதுமக்கள் அபிப்பிராயம்

குருநகர்,ஜூலை31

அரசு - புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டு ஏ-9 பாதை திறக்கப்பட்ட பின்னர் இப்பாதையூடாக தென்பகுதி மக்கள் யாழ்ப்பாணத்துக்கு நாளாந்தம் அதிக எண்ணிக்கையில் வருகின்றார்கள்.

இவர்கள் போரினால் சேதமடைந்த நிலையிலுள்ள பல கட்டடங்களையும், இடங்களையும் பார்வையிடுவதுடன் அவற்றின் முன்பாக நின்று படம் பிடிப்பதிலும் ஆர்வம் காட்டிவருகின்றனர்.

ஆனால், யாழ்நகரில் போரினால் சேதமடைந்த நிலையிலுள்ள பல இடங்கள் முன்னர் என்ன பெயருடன் எப்படி இருந்தன என்பதைத் தென்னிலங்கை வாசிகளால் அறியமுடியவில்லை.

அத்துடன் புலம்பெயர்ந்த தமிழ்க் குடும்பங்கள் இங்கு வரும்போது அங்கு பிறந்து வளர்ந்த தமது பிள்ளைகளுக்கு குடாநாட்டின் முன்னைய நிலைமையைக் காட்டவும் முடிவதில்லை.

குறிப்பாக சேதமடைந்து, எல்லைகளை இழந்து காடுமண்டிய நிலங்களாகக் காட்சியளிக்கும் யாழ். மாநகர சபை, சுப்பிரமணிய பூங்கா, முன்னைய யாழ். பொலிஸ் நிலையம் போன்றவற்றின் பெயர்ப்பலகைகளை, அந்த இடங்களின் பழைய நிலைமையைக் காட்டும் புகைப்படங்களுடன் அப்பகுதியில் சம்பந்தப்பட்ட அலுவலகங்கள் நிறுவினால் பார்வையிடும் மக்களுக்கு உதவியாக அமையும் என பலர் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர். (ஏ-51)

## வேலணைப் பாடசாலையின் பிரதானபாதை மூடப்பட்டது!

யாழ்ப்பாணம்,ஜூலை31

வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகா வித்தியாலயத்திற்கு செல்லும் பிரதான பாதையை பொதுப் பாவனைக்குப் பயன்படுத்த மீண்டும் படையினர் அனுமதி மறுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இப்பாடசாலைக்குச் செல்லும் பிரதான வீதியின் இருமருங்கிலும் முகாம் அமைத்துப் படையினர் தங்கியுள்ளனர்.

ஆயினும், சமீபகாலமாக மாணவர்கள், ஆசிரியர்கள் உட்பட பாடசாலைக்குச் செல்லுவோரை இப்பாதை ஊடாகச் செல்லப் படையினர் அனுமதித்துவந்ததாகவும் -

நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகள் மற்றும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள் ஆகியோரை வரவழைத்த படையினர், அவர்கள் முன்னிலையில் பிரதான வீதி ஊடாக பாடசாலைக்குச் செல்ல எவரையும் அனுமதிக்கமுடியாது என்று அறிவித்ததாகவும் - கூறப்படுகிறது.

புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி இராணுவமுகாம் உள்ள பகுதிகள் ஊடான பொதுநடமாட்டத்தைத் தடுக்கும் உரிமை தமக்கு உண்டு எனப் படையினர் அப்போது கூறியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பாடசாலைக்குச் செல்வதற்கு தாம் புதிதாக அமைத்துள்ள பாதையைப் பயன்படுத்திக்கொள்ளும்படியும் படையினர் தெரிவித்தனராம்.

புதிதாக அமைக்கப்பட்ட மண்பாதை வழியே பாடசாலை செல்வதாயின் சுமார் ஒன்றரை கிலோமீற்றர்கள் மேலதிகமாகச் செல்லவேண்டியுள்ளதாகவும் -

அப்பாதை சீரற்றும், மண் புழுதி நிறைந்தும் இருப்பதால், அதன்வழியே பயணிப்பது பெரும் சிரமமாக உள்ளதாகவும் -

பாடசாலைச் சமூகம் தெரிவித்துள்ளது. (ஓ)

### நாளை

ஆடி 16
வியாழக்கிழமை
(01.08.2002)
திதி:அட்டமி
பிற்பகல் 2.58 வரை.
நட்சத்திரம்: அச்சுவினி
முற்பகல் 11.28வரை.
சுபநேரம் : 7.31 - 9.03
ராகுகாலம் : 1.33 - 3.03
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

இரக்கம் காட்டவேண்டும் தான். ஆனால் அது இயலாமை என்று கருதப்பட்டு விடக்கூடாது.

### 5ஆம் தர புலமைப் பரிசில்

## விண்ணப்பித்த மாவட்டத்திலேயே பரீட்சைக்குத் தோற்றவேண்டும்

### திணைக்களம் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை31

எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெறவுள்ள ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றுவதற்கென வெளிமாவட்டப் பாடசாலைகள்மூலம் விண்ணப்பித்துவிட்டு தற்பொழுது யாழ். மாவட்டப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் தாம் விண்ணப்பித்த மாவட்டங்களிலேயே பரீட்சைக்குத் தோற்றவேண்டும் என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

தமது பாடசாலைகளில் கல்வி பயிலும் 5ஆம் தர மாணவர்களுக்கும், அவர்களது பெற்றோர்களுக்கும் இது குறித்துத் தெரியப்படுத்தி அந்த மாணவர்கள் விண்ணப்பித்த மாவட்டங்களிலேயே பரீட்சையில் தோற்றச் செய்யுமாறு சகல பாடசாலை அதிபர்களையும் பரீட்சைத் திணைக்களம் கேட்டுள்ளது.

அண்மையில் ஏ-9 தரைவழிப் பாதை திறக்கப்பட்டதை அடுத்து வெளிமாவட்டங்களில் வசித்து வந்த குடாநாட்டு மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு வந்தமையால் தமது பிள்ளைகளையும் இங்குள்ள பாடசாலைகளில் கல்வி பயில்வதற்காக அழைத்து வந்துவிட்டனர்.

இதன் காரணமாக அவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றுவதற்குரிய ஏற்பாடுகளை யாழ்கல்வி வலயம் மேற்கொண்டிருந்தது. வெளி மாவட்டங்களில் இருந்து பரீட்சைக்கு விண்ணப்பித்துவிட்டு இங்கு கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையைப் பரீட்சைத் திணைக்களமும் கேட்டிருந்தது. இந்த நிலைமையிலேயே தற்போதைய அறிவித்தல் வந்துள்ளது.(ஏ-10)

### கல்வித்துறை அதிகாரிகள்

## மாணவருக்கு நன்னெறி புகட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும்!

### விடுதலைப் புலிகள் வலியுறுத்து

குருநகர்,ஜூலை31

மாணவர்களுக்கு நன்னெறி புகட்டும் பணியில் ஆசிரியர் மற்றும் அதிபர்கள் ஈடுபட கல்வி அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினருக்கும் யாழ்.வலயக் கல்விப் பணிமனைகளில் சேவைபுரியும் உயரதிகாரிகளுக்குமிடையே நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்ட விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் இவ்வாறு வலியுறுத்தியுள்ளனர்.

யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் யாழ் மாவட்டத்திலுள்ள ஐந்து கல்வி வலயங்களின் கல்விப் பணிப்பாளர்கள், யாழ். மேலதிக கல்விப்பணிப்பாளர், கல்வி வலயங்களின் நிர்வாக உத்தியோகத்தர்கள், கணக்காளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, கவியன்பன், இலக்கியன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை அரசு நிறைவேற்ற ஒவ்வொருவரும் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமெனவும் -

மாணவர்களின் ஒழுக்கச் சீர்கேடுகளைத் திருத்தி அவர்களுக்கு ஒழுக்கநெறிகளையும் தமிழ்ப் பண்பாட்டையும் புகட்ட ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு அதிகாரிகள் அறிவுறுத்தல்கள் கொடுக்கவேண்டுமெனவும் -

இக்கலந்துரையாடலில் அரசியல்துறையினர் ஆலோசனை வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஏ-51)

### முகமாலையில் பறிமுதலான

## 'ரிமோட் கொன்ரோல்'களை உரியவர் பெற்றுக்கொள்ளலாம்

### சாவகச்சேரி நீதிமன்றத்தில்

தென்மராட்சி,ஜூலை31

முகமாலை சோதனை நிலையம் ஊடாக பொதுமக்களால் எடுத்துவரப்பட்டபோது 'தடைவிதிக்கப்பட்ட பொருள்' எனக்கூறி முகமாலைப் பொலீஸாரால் தடுத்துவைக்கப்பட்ட 'ரி.வி. ரிமோட் கொன்ரோல்' சாதனங்களை உரியவர்களிடம் ஒப்படைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் அ.பிறேம்சங்கர் கொடிகாமம் பொலீஸாருக்கு உத்தரவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தெற்கிலிருந்து முகமாலை ஊடாக வடபகுதிக்கு வந்த பயணிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்த 71 'ரி.வி. ரிமோட் கொன்ரோல்' சாதனங்களை நீதிமன்றில் பொலீஸார் பாரப்படுத்தியபோதே அவற்றினை உரியவர்களிடம் ஒப்படைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். தற்போது சாவகச்சேரி நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ள 'ரி.வி. ரிமோட் கொன்ரோல்' சாதனங்களை அவற்றின் உரிமையாளர்கள் அவற்றுக்கான உரிய பற்றுச்சீட்டுக்களைக் காட்டி நீதிமன்ற அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்று பதிவாளர் அறிவித்துள்ளார். சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றம் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றக் கட்டடத்தில் இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஏ-117)

**சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)**

**NPGI - 0001 இலக்க லங்கா அசோக் லேடன் லொறி**

**திருத்தம் செய்வதற்கான கூறுவிலை**

மேற்படி சங்க லொறியினை திருத்தம் செய்வதற்கு கூறு விலை கோரப்படுகின்றது. இதற்கான மேலதிக விவரங்களை எமது தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

முடிவு திகதி: 09/08/2002

எம்மிடம் இரண்டு தரமான 90 அம்பியர்ஸ் பற்றரிகளும் விற்பனைக்கு உண்டு.

*தாமோதரம்பிள்ளை வீதி,*
*சாவகச்சேரி.*

தலைவர்.

(C/23116)


## துயர் பகிர்கின்றோம்



தாயின் மடியில் 15 - 08 - 1978

இறைவன் அடியில் 29 - 07 - 2002

எமது நண்பன் க.ஜெயதாஸ்

அவர்களின் அன்புச் சகோதரன்

### செல்வன் கனகநாயகம் ஜெயபிரகாஸ்

*அவர்களின் அகால மரணத்தினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவர்களது துயரில் நாமும் பங்குகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*சாரையடி,*
*புலோலி.* (6536)

கிருஸ்ணா
தொலைத் தொடர்பக சமூகத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 16 - 06 - 1938

உதிர்வு 11 - 08 - 2001

அமரர்

### சரவணமுத்து கனகலிங்கம் *(செட்டியார்)*

(ஓய்வுபெற்ற சாரதி - இலங்கை போக்குவரத்துச்சபை)

*எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே!*
*பண்பிலே தெய்வமாய்*
*பாசத்தின் திருவுருவாய்*
*பாரினிலே வாழ்ந்தவரே!*
*எமக்கு அன்பூட்டி அறிவூட்டி*
*ஆதரவு காட்டி வழி நடத்தினீரே!*
*கண்ணாக எமைப் பேணிக்*
*கருத்தோடு வளர்த்தவரே!*
*பாரினிலே பல சிறப்பும்*
*பெற்று நாம் வாழ்வதனை*
*பார்த்திருந்து களித்தீரே!*
*என்றென்றும் உம் நினைவே*
*இதயத்தில் இருக்குதையா!*
*ஆண்டொன்று சென்றாலும்*
*ஆறிடுமோ எம் துயரம்!*
*ஆண்டு நூறு போனாலும்*
*அறுந்திடுமோ உம் நினைவு!*
*இறைவனின் அடியினில் நீர்*
*இனிதாக வாழ்ந்திடவே*
*இரவு பகலாக இறைஞ்சுகின்றோம் நாமெல்லாம்!*

*மட்டுவில் தெற்கு,*
*சாவகச்சேரி.* (6524)

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### திருமதி தர்மகுலசிங்கம் கமலாதேவி
(கமலா)

கைதடி, நுணாவிலைப் பிறப்பிடமாகவும் நுணாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தர்மகுலசிங்கம் கமலாதேவி அவர்கள் 29.07.2002 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் தர்மகுலசிங்கத்தின் அன்பு மனைவியும் நடராஜமூர்த்தி (ஜேர்மனி), சியாமளா, வதனா, வனிதா, சுரேஸ் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.07.2002) புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நுணாவில் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*190ஆம் கட்டை,*
*மணல்குணாய் வீதி,*
*நுணாவில் மேற்கு,*
*சாவகச்சேரி.*

தகவல்:
சி.தர்மகுலசிங்கம்

(6534)

## வீதிகள் புனரமைப்பு

அரசின் நூறு நாள் அபிவிருத்தித் திட்டத்தின் அடிப்படையில் சாவகச்சேரி பிரதேச சபையின் ஆறு பணிமனைப் பிரிவுகளுக்குட்பட்ட வீதிகள் துரித கதியில் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை, நாவற்குழி, வரணி, கைதடி, கச்சாய், மிருசுவில் ஆகிய பிரிவுகளில உள்ள வீதிகளே புனரமைப்புச் செய்யப பட்டு வருகின்றன. இப்புனரமைப்புப் பணியை விரைவில் நிறைவு செய்ய சாவகச்சேரி பிரதேச சபையினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.(ஒ-8)

## இளைஞர் கைதாகி ஆஜர்

நீதிமன்ற உத்தரவை நிறைவேற்றச் சென்ற உத்தியோகத்தரை (பிஸ்கால்) தடுக்க முற்பட்ட இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் யாழ்.நீதிமன்றில் பொலீஸாரால் ஆஜர் செய்யப்பட்டார்.

கடந்த 24ஆம் திகதி யாழ்.பிரவுண் வீதிப் பகுதியில் நீதிமன்ற உத்தரவை நிறைவேற்றச் சென்ற உத்தியோகத்தரை அப்பகுதி இளைஞர்கள் சிலர் தடுக்க முற்பட்டமை பற்றி மன்றுக்குத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து உரியவர்களைக் கைதுசெய்து மன்றில் முற்படுத்துமாறு நீதிவான் இ.த.விக்னராஜா பொலீஸாருக்கு உத்தரவிட்டிருந்தார்.

இதனை அடுத்து யாழ்.நீராவியடியைச் சேர்ந்த இராஜலிங்கம் விக்கிரமராஜலிங்கம் (கண்ணன்) என்ற இளைஞரைப் பொலீஸார் கைதுசெய்து ஆஜர் செய்தபோது அவரை எதிர்வரும் 12 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-10)


# HATTON NATIONAL
## Children Village
## மாதிரி விண்ணப்பப் படிவம்

பங்குபற்றும் போட்டி - பாட்டு/நடனம் /ஓவியம்

முழுப்பெயர் - --------------------------------------------------

பிறந்த திகதி - -------/-------/19---

முகவரி - --------------------------------------------------

--------------------------------------------------

----------------------------தொலைபேசி--------------------

பாடசாலை - --------------------------------------------ஆண்டு----------

ஹற்றன் நஷனல் சேமிப்புக் க/கு இருப்பின் இல.------------------------------------------

### பாட்டுப் போட்டி

| மொழி - தமிழ் | ஆண்டு 6-9 | ஆண்டு 10-11 | ஆண்டு 12-13 |
|---|---|---|---|
| பாட்டு | பாரதியார் பாடல் | வர்ணம் - கீர்த்தனை | ராகம் - கீர்த்தனை<br>நிரவல்<br>- கற்பனேஸ்வரம்<br>- திருப்புகழ் |
| நேரம் | 5-6 நிமிடம் | 8-10 நிமிடம் | 10-15 நிமிடம் |
| மொழி - ஆங்கிலம் | | | |
| பாட்டு | My Bonnie | Santa Lucia | The Happy Wanderer |
| நேரம் | 6-9 நிமிடம் | 10-11 நிமிடம் | 12-13 நிமிடம் |

### நடனப் போட்டி

| | ஆண்டு 6-9 | ஆண்டு 10-11 | ஆண்டு 12-13 |
|---|---|---|---|
| நடனம் | பாரதியார் பாடல்<br>கீர்த்தனம் | ஜதீஸ்வரம் | கீர்த்தனம்/சப்தம் |
| நேரம் | 5-7 நிமிடம் | 6-8 நிமிடம் | 8-10 நிமிடம் |

### ஓவியப் போட்டி

| | ஆண்டு 1-5 | ஆண்டு 6-9 | ஆண்டு 10-11 | ஆண்டு 12-13 |
|---|---|---|---|---|

ஓவியத்தின் அளவு - B4 (10"x14") உபகரணம் - வரையறை கிடையாது.

தலைப்பு--------------------------------------------------------------------

(போட்டியாளர் தமக்கு விரும்பிய விடயத்தைத் தலைப்பாகக் கொள்ளலாம்.)

விண்ணப்பத்தை ஓவியத்தின் பின்புறம் ஒட்டி பாடசாலை அதிபரிடம் உறுதிப்படுத்தி 2002.08.05 இற்கு முன் வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக முகாமையாளர், ஹற்றன் நஷனல் வங்கி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கவேண்டும்.

### நாடகம்

ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் தமிழ் அல்லது ஆங்கிலமொழியில் ஒரு நாடகம் மட்டும் போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

வயதெல்லை - இல்லை
நேரம் - 15-20 நிமிடம்

- ஒரு போட்டியாளர் குறித்த ஒரு போட்டிக்கு ஒரு விண்ணப்பத்தை மட்டுமே சமர்ப்பிக்கலாம்.
- ஒரே போட்டியாளர் மூன்று போட்டிகளிலும் பங்குபற்றலாம். (தனித்தனி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டும்.)
- வெற்றியாளர்களுக்கு பணப்பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.
- வெற்றியாளர் எமது "சிங்கிதி" க/கு வைப்பாளராயின் மேலதிக பரிசுகளும் வழங்கப்படும்.
- போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் யாவும் 05.08.2002இற்கு முன்னர் தங்கள் பகுதி வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்படல்வேண்டும்.
- *இறுதிப் போட்டிகள் யாவும் ஒகஸ்ட் 18ஆம் திகதி யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரியில் நடத்தப்படும்.*
- ஆங்கிலப் பாடல்களையும் மேலதிக விவரங்களையும் பெற விரும்புவோர் ஹற்றன் நஷனல் வங்கி யாழ். கிளையுடன் தொடர்புகொள்ளவும்.

தொலைபேசி இல.: 2787, 3463

(C/23110)

### வலி.வடக்கு விவசாயிகள் சங்கம் கோரிக்கை

# சொந்தமண்ணில் விவசாயம் செய்து நிம்மதியாக வாழ வழிசெய்யுங்கள்!

யாழ்ப்பாணம்,ஜூலை31

சொந்தமண்ணில் விவசாயம் செய்து, அமைதியான - நிம்மதியான - வாழ்க்கை நடத்த வழிவகுத்துத் தாருங்கள்.

- இவ்வாறு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர் வலிகாமம் வடக்கு விவசாயிகள்.

மேற்படி விவகாரம் குறித்து வலிகாமம் வடக்கு விவசாயிகள் சங்கம் அனுப்பிவைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

20.07.2002இல் வலி.வடக்குப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற மாநாட்டில் கலந்து எமது மக்களது அவலநிலையை நீக்கப் பங்களிப்புச் செய்தமைக்கு உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அந்த மாநாடு எமக்கு எந்தவித நன்மையையும் பெற்றுத்தரப்போவதில்லை என்பது எமது அபிப்பிராயமாகும். விவசாயிகளாகிய எங்கள் பிரச்சினைகள் பற்றி அரசதரப்பினர் அங்கு மௌனம் சாதித்துவிட்டனர்.

கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாகச் சொந்தநாட்டிலேயே அகதிகளாக அவலவாழ்வு வாழும் எமக்கு எமது விவசாய நிலங்களைப் பெற்றுத்தருதல் வேண்டும். சொந்தமண்ணில் நாம் குடியிருக்க உதவவேண்டும்.

நிரந்தர சமாதானம் ஏற்படும்வரை உயர் பாதுகாப்பு என்று குறிப்பிடப்படும் பகுதிகளில் வாழ்ந்த மக்களுக்கு இயல்பு வாழ்க்கை இல்லை. இயல்பு வாழக்கை வாழக்கூடாது என்று புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளதாக நாம் கருதவில்லை.

எனவே, பிரதமருடனான சந்திப்பிலும், அடுத்துவரும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரிலும் எமது பிரச்சினைகள் பற்றித் தாங்கள் போதிய அழுத்தங்களைக் கொடுக்கவேண்டும்.

பயன்கிட்டாதவிடத்து நாம் சாத்வீகப் போராட்டங்களை முன்னெடுக்கப் பூரண ஒத்துழைப்பும் பங்களிப்பும் வழங்கும்படி கேட்டுக்கொள்கின்றோம் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# பொலீஸ்மா அதிபர் பதவியை அடையவிடாமல் தடுக்க சதி!

## கொட்டகதெனிய குற்றச்சாட்டு

நான் நாட்டில் இல்லாதவேளை பத்திரிகையாளர் மாநாடு நடத்தி என்மீது சேறுபூசுவது பொலீஸ்மா அதிபர் பதவிக்குக் களங்கம் விளைவிக்கும் ஒரு செயலாகும்.

- இவ்வாறு நாடு திரும்பிய பிரதி பொலீஸ்மா அதிபர் கொட்டகதெனிய குற்றஞ்சாட்டியுள்ளார்.

பொலீஸ்மா அதிபராக நான் வந்துவிடுவேன் என்று எனது உயர்வுக்கு எதிராக சகல வழிகளிலும் இவர்கள் செயற்பட்டனர். எனக்கெதிராகச் சொலப்பட்ட பொய்க் குற்றச்சாட்டுகளுககு நீதி விசாரணை கோரி நீதிமன்றம் செல்வேன்.

1998ஆம் ஆண்டு தங்காலைக்கு தொழில் நிமித்தமாகச் சென்றேன். அங்குள்ள ஹோட்டல் ஒன்றில் காலை உணவு அருந்தும்போது எதிர்பாராமல் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திக்க நேர்ந்தது. அப்போது என் மனைவி மரியாதை நிமித்தம் அவரோடு கதைத்தார்.

எதிர்பாராத இச்சந்திப்பை அன்று நான் ரணிலுடன் சேர்ந்து சதித்திட்டம் தீட்டுவதாக ஜனாதிபதிக்கு அறிவிக்கப்பட்டது. இப்படி என்மீது பல குற்றங்களைச சுமத்திப் பொலீஸ்மா அதிபர் பதவியை அடையவிடாது என்னைத் தடுத்தனர்.

என்னைப் பத்திரிகையாளர்கள் சந்திக்கவரும் பொழுதெல்லாம் அவர்களைச் சந்திக்கவிடாமல் திருப்பி அனுப்புமாறு உத்தரவிடப்பட்டது.

இதனால் எனது பொறுப்பில் உள்ள பௌத்தலோக குற்றப் புலனாய்வுப் பணியகத்திற்கு பத்திரிகையாளரை வரவழைத்துக் கலந்துரையாடினேன். அதனால் குற்றப்புலனாய்வுப் பொறுப்பதிகாரிக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இதுபோன்று பொலீஸ தலைமையகம் நடந்துகொள்வது ஜனநாயகத்திற்கு விரோதமானது.

இன்றைய பொலீஸ்மா அதிபர் பதவியேற்றபோது நாட்டில் குற்றங்கள மலிந்திருந்தன. அப்போது குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டது.

குற்றங்களை மட்டுப்படுத்தும் நடவடிக்கையில் சமூக விரோதக் கும்பலின் தலைவர் ஒருவரைக் கைது செய்தேன். அதையடுத்து கைதுசெய்வது உனது கடமை அல்ல எனக் குறிப்பிட்டு பொலீஸ்மா அதிபர் என்னிடம் விளக்கம் கோரினார். இவற்றின பின்னணி என்ன என்பதே எனது கேள்வியாகும்.

- இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். (ஒ)

### பரிபாலன சபையினர் ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம்,ஜூலை31

வலி.கிழக்கு கோட்டத்துக்குட்பட்ட இந்து ஆலயங்களின் பரிபாலன சபையினருக்கான ஒன்றுகூடல் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்து ஆலயங்களின் பரிபாலன சபையினரை இதில் கலந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகளின் வலி.கிழக்கு கோட்ட அரசியல்துறையினர் கேட்டுள்ளனர். (ஐ)

# கைதிகள் விடுதலையைத் துரிதமாக்க தமிழ் எம்.பிக்களின் குழு அமைப்பு

கொழும்பு,ஜூலை31

சிறைகளில் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பான வழக்குகளைத் துரிதப்படுத்துவது குறித்து ஆராய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான அ.விநாயகமூர்த்தி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம், என்.ரவிராஜ் ஆகியோர் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

அண்மையில் பாதுகாப்பு அமைச்சில் தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் குறித்து ஆராயப்பட்ட ஒரு கூட்டத்தின் தீர்மானத்தின்படியே இக்குழு அமைக்கப்பட்டது.

இக்குழுவினர் தமிழ் அரசியல் கைதிகள் சம்பந்தப்பட்ட வழக்குகளின் விவரங்களைச் சேகரித்து சட்டமா அதிபரிடம் கையளிப்பர்.

அதையடுத்து சட்டமா அதிபர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளில் யாரை விடுவிப்பது, யார் மீது வழக்குத் தொடருவது என்பதைத் தீர்மானிப்பர். (ஐ-9)

# சர்ச்சைக்குரிய 'வற்' வரி நாளை முதல் அமுலுக்கு

கொழும்பு,ஜூலை31

நாளை முதலாம் திகதி முதல் 'வற்'வரி (பெறுமதி சேர்வரி) நடைமுறைக்குவரும். இதுவரை நடைமுறையில் இருந்துவந்த பொருள்கள், சேவைகள் வரி (ஜி. எஸ்.ரி.) மற்றும் பாதுகாப்பு வரி என்பன முற்றாக ஒழிக்கப்பட்டுவிட்டன. உணவு மற்றும் அத்தியாவசியப் பாவனைப் பொருள்களுக்கு இனி தீர்வை வரி உட்பட எந்த வரியும் அறவிடப்படமாட்டாது. மருந்து வகைகளுக்கான சகல வரிகளும் முற்றாக நீக்கப்பட்டுள்ளன. இதனால் பொருள்களின் விலைகளில் சரிவு ஏற்படும். பாவனையாளர்களுக்கு நிவாரணம் கிடைக்கும்.

- இவ்வாறு நிதி அமைச்சர் கே. என்.சொக்ஷி நேற்றுமுன்தினம் உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

கடந்த 24ஆம் திகதி நாடாளுமன்றத்தில் 'வற்'வரி தொடர்பான சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டபோது ஜே.வி.பியினரும் பொதுஜன ஐக்கிய முன்னணியினரும் ஏற்படுத்திய அமளிதுமளியால் விவாதம் இன்றியே இச்சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது.

இதனால் நாட்டு மக்களுக்கு 'வற்' வரி மூலம் கிடைக்கும் நன்மைகளை அறிந்துகொள்ள முடியாமல் போய்விட்டது. 'வற்' வரியின் உண்மைத் தன்மை அறியாத எதிர்க்கட்சியினர் பொதுமக்களைத் திசை திருப்பும் வகையில் தவறான பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

- இப்படிக் கூறிய நிதி அமைச்சர், உண்மை நிலையை நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்தும் வகையில் நேற்றுமுன்தினம் தனது அமைச்சில் செய்தியாளர் மாநாட்டில் தகவல்களை வெளியிட்டார். (ஐ)

# தென்பகுதி மாணவர்கள் யாழ்ப்பாணம் விஜயம்

யாழ்ப்பாணம்,ஜூலை31

கல்வியியற் கல்லூரிகளுக்கிடையில் மிக நெருக்கமான உறவுப் பாலமொன்றை ஏற்படுத்தும் நோக்கிலும், சமாதான முயற்சிகளின் நல்லெண்ணத்தை வலுப்படுத்தும் முகமாகவும் காலி மற்றும் ருகுனு தேசிய கல்வியியற் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் அடங்கிய குழுவொன்று கடந்த 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டது.

ஜி.ரி.இசற் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம் விஜயம் செய்துள்ள இக்குழுவினர் யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்களுடன் இணைந்து கடந்த வெள்ளிக்கிழமை நயினாதீவுக்கு சுற்றுலா மேற்கொண்டனர்.

இக்குழுவினர் கடந்த திங்கட்கிழமை யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை, சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி ஆகியவற்றுக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிட்டனர்.

இக்குழுவினர் யாழ்ப்பாணத்திற்கான சுற்றுலாவை முடித்துக்கொண்டு நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்பு திரும்பினர். இவர்களுடன் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் மாணவர்களும் விரிவுரையாளர்களும் இணைந்து கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த குழுவில் ருகுணு தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி திருமதி லக்ஷ்மி கலுவாராச்சி, ஜி.ரி.இசற் நிறுவனத்தைச் சேர்ந்த கலாநிதிகுக், கலாநிதி கு.சோமசுந்தரம், எஸ். அபயக்கோன், சேர்லி ஜயமகா ஆகியோரும் இடம்பெற்றிருந்தனர்.(ஒ-8)

# இலங்கையின் சட்டங்களால் தமிழருக்குப் பாதிப்பு அதிகம்!

## அமெரிக்கப் பேராசிரியரிடம் புகார்

இலங்கையில் நடைமுறையில் உள்ள சட்டங்கள் தமிழ்மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துவனவாகவே உள்ளன. குறிப்பாக பயங்கரவாதத் தடைச்சட்டம் இவ்வாறான ஒரு சட்டமாகவே உள்ளது.

- அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த நியூயோர்க் பல்கலைக்கழகச் சட்டதுறைப் பேராசிரியரும் மாறிவரும் நீதிக்கான சர்வதேச நிலையத்தின் தலைவருமான அலெக்ஸ் பொறையினிடம் யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

கடந்த வியாழக்கிழமை மாலை 6 மணியளவில் இணையப் பணிமனையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இணையப் பிரதிநிதிகளால் பல விடயங்கள் பற்றி அலெக்ஸ் பொறையினிடம் எடுத்துக்கூறப்பட்டது.

சந்தேகத்தின்பேரில் தமிழ் மக்களைக் குறிப்பாக இளைஞர்களைத் தடுத்துவைத்தல், சந்தேகத்தின் பேரில் கைதுசெய்தல் மற்றும் காணாமற்போதல் போன்றவற்றுக்கும் நடைமுறையில் உள்ள சட்டங்களே காரணமாக உள்ளன. கடந்த 96ஆம் 97ஆம் ஆண்டுகளில் காணாமற்போன சுமார் 600 பேரின் நிலை பற்றி அரசாங்கம் இதுவரை காலமும் திட்டவட்டமான பதிலைதையுங் கூறவில்லை.

பயன்தரும் மரங்கள் அழிக்கப்பட்டு வருவதால் பெரும் சூழல் பாதிப்பு ஏற்படுகிறது. இதனால் சுமார் பத்து வருடங்களில் யாழ். குடாநாடே வனாந்தரமாகிவிடும். மரங்கள் அழிக்கப்படுவது தொடர்ந்தும் இடம்பெறுகிறது.

நாடு சுதந்திரம் பெற்ற 1948ஆம் ஆண்டிலிருந்து மாறிமாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களால் தமிழ்மக்களுக்குப் பல அநீதிகள் இழைக்கப்பட்டன. வாக்குரிமை பறிப்பு, சிங்களத் தனிச்சட்டம், கல்வியில் தரப்படுத்தல் மற்றும் பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம் என்பன கைவிடப்பட்டமை போன்றவை இதற்கு உதாரணங்களாகும்.

யுத்தத்தில் வென்றவர்களுமில்லை, தோற்றவர்களுமில்லை. எமக்குத் தேவை சமாதானமே. புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்ள அம்சங்களை நடைமுறைப்படுத்துவதில் அரசு மந்தப்போக்கையே கடைப்பிடித்து வருகிறது. ஒப்பந்தத்தில் உள்ள அம்சங்கள் யாவும் காலஎல்லை நிர்ணயிக்கப்பட்டு நிறைவேற்றப்படவேண்டும். நீதி தாமதமடைவது அதனை மறப்பதற்குச் சமமாகும். அரசின் செயற்பாடுகள் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டுவனவாக அமையவேண்டும்.

இவ்வாறு கலந்துரையாடலில் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (ஒ-10)

### தங்கச் சங்கிலி அபகரிப்பு

சாவகச்சேரி,ஜூலை31

சரசாலைப் பகுதியில் இருந்து சாவகச்சேரிக்குப் போய்க்கொண்டிருந்த ஆசிரியை ஒருவரின் தங்கச் சங்கிலி அவ்வீதியால் மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்களால் அபகரிக்கப்பட்டது. கடந்த வாரம் கெருடாவில் பகுதியில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ஒ-31)

### அமெரிக்கா, இந்தியாவை அரவணைத்தபடி

# சமாதானத்தை முன்னெடுப்பதில் இரட்டைவேடம் போடுகிறது அரசு!

## புதிய ஜனநாயகக் கட்சிப் பிரமுகர் உரை

சண்டிலிப்பாய்,ஜூலை31

"அமெரிக்காவையும், இந்தியாவையும் அரவணைத்துக் கொண்டு சமாதானத்தை முன்னெடுப்பதில் அரசு இரட்டைவேடம் கொண்டு செயற்படுகிறது."

- இவ்வாறு தெரிவித்தார் புதிய ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்தில்வேல்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். 'சிற்றி' மண்டபத்தில் இடம்பெற்ற அக்கட்சியின் அரசியல் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்:-

"நிரந்தர சமாதான முன்னெடுப்புக்கு பேரினவாதம் பெரும் தடைக்கல்லாக உள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியும் சமாதான முன்னெடுப்பை முழுமுழுதாகக் கொண்டுவரும் என்று நம்பியிருக்கமுடியாது. அமெரிக்காவையும், இந்தியாவையும் அரவணைத்துக்கொண்டு சமாதானத்தை முன்னெடுப்பதில் அரசு இரட்டைவேடத்தைக் கொண்டு செயற்பட்டு வருவதை அவதானிக்கலாம். வெளிநாடுகளுடன் ஒப்பந்தங்களைச் செய்து கொண்டுள்ள அதேநேரத்தில், யுத்த நிறுத்தம் மட்டும் இங்கு தொடரவேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறிவருவது எமக்கு பலத்த சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. இடைக்கால நிர்வாகத்தைப் புலிகளிடம் கொடுக்கவேண்டாம் என்றும், கொடுக்கவேண்டும் என்றும் இரு மாறுபட்ட கருத்துக்கள் அரசதரப்பில் அமைச்சர்கள் மத்தியில் இருந்து வெளிவருகின்றது.

"சமாதான சூழல் இங்கு எப்போது ஏற்படும் என்று எதிர்பார்த்திருந்த மக்களுக்கு கடந்த ஆறுமாத காலமாக இங்கு நிலவிவரும் யுத்தநிறுத்தம் பெரும் நிம்மதியைக் கொடுத்துள்ளது. நிரந்தர சமாதானத்தை அடைவதற்கு பல தடைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. தேசியப் பிரச்சினையான இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படும்போது எமது மக்களின் அடிப்படை அபிலாஷைகள் நிறைவு செய்யப்படவேண்டும்.

"இதற்குப் பேரினவாத சக்திகள் எவ்வளவு தூரம் ஒத்துவரும் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. வர்க்க விடுதலைக்கும், இனத்தின் விடுதலைக்கும் எதிரான சக்திகள் இன்று கைகோர்த்து நிற்கின்றன.

"இராணுவத்தில் சாதாரண மட்டத்திலிருந்து உயர்மட்டம்வரை பேரினவாதத்திற்கு துணைபோகும் நிலை காணப்படுகின்றது. அத்துடன் ஜே.வி.பியினரும் தங்கள் யுத்த கோஷத்தை சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து முன்னெடுத்து வருகின்றனர். ஜே.வி.பியின் இந்த யுத்த கோஷத்தையும் சமாதான எதிர்ப்பையும் சிங்களமக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது நிதர்சனமாகத் தெரிகின்றது. இதனாலேயே அக்கட்சி சுதந்திரக் கட்சியினருடன் இணைந்து எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றது.

"அண்மையில் நான் பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் சில நாடுகளுக்குச் சென்றபோது அங்குள்ள எம்மவர்கள் இங்கு நம் நாட்டில் சமாதானம் ஏற்படுவதை விரும்பவில்லை என்பதை அறிந்துகொள்ள முடிந்தது. சமாதானம் இங்கு ஏற்பட்டால் தாங்கள் திருப்பி அனுப்பிவைக்கப்படுவோமா என்ற பயம் அவர்களிடம் உள்ளது"

- என்று தெரிவித்தார். (ஒ-1.35)

# பண்ணையில் மீன்சந்தை அமைக்கும் பணி துரிதம்


யாழ்.மாநகராட்சி மன்றத்தினால் பண்ணையில் மீன்சந்தைக்கான கட்டடம் அமைக்கும் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த கட்டடப் பணிகள் பூர்த்தியடைந்ததும் கொட்டடியில் உள்ள மீன் சந்தை மேற்படி கட்டடத்திற்கு, மாற்றப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

தற்போது கொட்டடி மீன் சந்தையில் இடநெருக்கடியும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

# நெஞ்சைவிட்டு அகலாத

# பதினொராவது வருட நினைவஞ்சலி



# அமரர் வீ.எம்.கணபதிப்பிள்ளை

## (வீ.எம்.கே. ஜுவலர்ஸ், சாவகச்சேரி)

தோற்றம்
23-04-1913

மறைவு
31-07-1991

பார் போற்ற வாழ்ந்த பண்பாளனாம்
வீ.எம்.கே. எனும் கனவான்
தான்பெற்ற செல்வங்கள் சீரோடும் சிறப்போடும் வாழ
விட்டகன்று வருடங்கள் 11 உருண்டோடி மறைந்தாலும்
நாமெல்லாம் கொண்டதுயர் சற்றேனும் குறையாது!
இடரேது வந்தாலும் குறையாத உங்கள் கருணை
அழியாது ஒளி வீசி எம்மை என்றும் வழி நடத்தும்!

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

*V.M.K. JEWELLERS,*
*305, Kasthuriar Road,*
*Jaffna.*

தொலைபேசி இல:
070-212989
070-212244

நம்பிக்கையுடன் நாளும் வாழும்:
**வீ.எம்.கே. குடும்பத்தினர்**
சாவகச்சேரி.

(6347)

# பின்லேடனின் மகன் தலைமையில் அல்கெய்டா படை இயங்குகிறதாம்!

## அரபுப் பத்திரிகை தகவல்

காபூல்,ஜூலை31

ஆப்கானிஸ்தானில் செயற்பட்டு வரும் அல்கெய்டா படைக்குப் பின்லேடனின் மூத்தமகன் சாத் தலைமை தாங்கி நடத்தி வருவதாகச் செய்திகள் வெளியாகி உள்ளன.

சவூதி அரேபியாவைச் சேர்ந்தவர் ஒஸாமா பின்லேடன், அந்த நாட்டில் இருந்து வெளியேற்றப்பட்ட அவர் ஆப்கானிஸ்தானில் குடியேறி, பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டு வந்தார். சர்வதேச அளவில் தீவிரவாதச் செயல்களில் ஈடுபடுவதற்காக அவர் அல்கெய்டா என்ற பெயரில் ஒரு படையையும் நடத்திவந்தார்.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் 11ஆம் திகதி அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் நடத்தப்பட்ட தாக்குதலுக்குப் பிறகு, அமெரிக்கா ஆப்கானிஸ்தானில் தாக்குதல் நடத்தியது. இதில் பின்லேடனுக்கு ஆதரவாக இருந்த தலிபான் அரசு அகற்றப்பட்டது.

பின்லேடன் மறைந்து இருந்த தோரா போரா மலைப்பகுதியின் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதலில் பின்லேடன் கொல்லப்பட்டு இருக்க வேண்டும். அல்லது பலத்த காயம் அடைந்து இருக்கவேண்டும் என்று செய்திகள் வெளியாகி உள்ளன.

ஒருசிலர் இதை மறுத்து, அவர் பாகிஸ்தானில் ஆதிவாசிகள் வசிக்கும் பகுதிகளில் மறைந்து வாழ்வதாகவும் கூறி உள்ளனர்.

அமெரிக்கத் தாக்குதல் தொடங்கியது முதல் ஆப்கானிஸ்தானில் ரகசியமாக இயங்கிவரும் அல்கெய்டா அமைப்புக்கு பின்லேடனின் மூத்த மகன் சாத் பின்லேடன் தலைமை தாங்கி நடத்திவருவதாக லண்டனில் இருந்து வெளிவரும் அரபு நாளிதழான 'அஷார்க் அல்சாத்' செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்க இராணுவத்திடம் பிடிபட்ட அல்கெய்டா தீவிரவாதிகள் இந்தத் தகவலைத் தெரிவித்ததாகவும் அந்தப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தச் செய்தி மூலம், பின்லேடன் கொல்லப்பட்டு இருக்கலாம் என்ற செய்தி வலுப்பெற்றுள்ளது.

பின்லேடனுக்குப் பிறகு அவரது 2ஆவது மகன் 20 வயதுடைய முஹமது வாரிசாக வருவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் வெளி உலகத்தில் அதிகம் பிரபலமாகாத சாத், அல்கெய்டாவுக்கு தலைமை ஏற்றது ஆச்சரியமாக உள்ளது என்று அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பின்லேடனுக்கு பல மனைவிகள் மூலம் 20 மகன்கள் இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)



காஸாப்பகுதியில் இஸ்ரேலியப் படையினர் பலஸ்தீனர்களின் வீடுகளையும், தொழிற் கூடங்களையும் தகர்த்து நாசமாக்கியுள்ளனர். அவ்வாறு நாசமாக்கப்பட்ட தனது தந்தையின் தொழிற்கூடமொன்றில் பலஸ்தீனச் சிறுவன் ஒருவன் சோகமாக அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம். (ஒ)

# ஒரே குடும்பத்தினைச் சேர்ந்த 3தலைமுறையினர் விபத்தில் பலி!

## அயர்லாந்தில் பரிதாபம்

லண்டன்,ஜூலை31

அயர்லாந்து குடியரசில் நிகழ்ந்த படகு விபத்தொன்றில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 தலைமுறையினர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 26 அடி நீளமான படகில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களும், அவர்களது நண்பர்களும் பயணித்த படகே கடற்கொந்தளிப்புக் காரணமாக கவிழ்ந்து மூழ்கியுள்ளது.

இந்தப் படகில் பயணித்தவர்களில் 14 வயதான மார்க் டோயல் என்ற சிறுவனின் சடலம், வெற்றுப் பீப்பாய் ஒன்றை கட்டிப்பிடித்தபடி கடலில் மிதந்த சமயம் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டது.

மார்க்கின் தந்தை சீமஸ் டோயல், தாத்தா ஜிம்கூனி டோயல் மற்றும் குடும்ப நண்பர்களான ஜோன் கூலன், மார்டின் ரோச் ஆகியோரின் சடலங்கள் சம்பவம் இடம்பெற்ற அன்று மாலை மீட்கப்பட்டிருந்தன.

படகில் பயணித்தவர்களில் 4 சிறுவர்கள் உட்பட 5 பேர் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தபோது மீன்பிடிப்படகொன்றால் காப்பாற்றப்பட்டனர்.

படகில் எத்தனை பேர் பயணித்தனர் என்ற விவரத்தை கூறக்கூடிய எவரும் வெளியே உயிருடன் இல்லை என்பதால் இந்த விபத்தில் எத்தனை பேர் உயிரிழந்தார்கள் என்பதை சரியாக மதிப்பிடமுடியவில்லை என்று பொலீஸார் தெரிவித்தனர். (ஒ)

### ஆளுங்கட்சி வெற்றி

நியூஸிலாந்தில் நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் பிரதமர் ஹெலன கிளார்க் தலைமையிலான ஆளும் தொழிற்கட்சி வெற்றி பெற்றது. எனினும் அறுதிப் பெரும்பான்மை பெறவில்லை.

பதிவான மொத்த வாக்குகளில் தொழிற்கட்சிக்கு 41.3சதவீத வாக்குகள் கிடைத்தன. 120 ஆசனங்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் தொழிற்கட்சிக்கு 52 இடங்களும் தேசியக் கட்சிக்கு 27 இடங்களும் கிடைததுள்ளன. ஏனைய இடங்களை சுயேச்சைகளும் மற்றைய கட்சிகளும் வென்றுள்ளன.

இந்த வெற்றியைத் தொடர்ந்து பிரதமர் ஹெலன் புதிய அரசை விரைவில் அமைக்கவுள்ளார். சிறிய கட்சிகள் அவருக்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

# 55 திமிங்கிலங்கள் திடீரென அமெ. கரையோரம் ஒதுங்கின

## அவற்றில் ஒன்பது இறந்தன! ஏனையவற்றை கடலில் விட முயற்சி!!

வாஷிங்ரன்,ஜூலை31

அமெரிக்காவின் கிழக்குக் கடற்கரையில் ஒரே தடவையில் 55 திமிங்கிலங்கள் திடீரெனக் கரையொதுங்கி உள்ளன.

இவ்வளவு பெரும் எண்ணிக்கையில் திமிங்கிலங்கள் கரையொதுங்குவது அபூர்வமான ஒரு நிகழ்வாகும். கரையொதுங்கிய திமிங்கிலங்கள் உயிரிழந்துவிடாமல் இருப்பதற்காக அவற்றை மீண்டும் ஆழ்கடலில் கொண்டு சென்றுவிடும் முயற்சியில் ஆய்வாளர்களும் தொண்டர்களும் ஈடுபட்டுள்ளனர்.

கரையொதுங்கிய திமிங்கிலங்கள் கரையோர மணலில் சிக்கிக்கொண்டன. அவற்றைப் பாதுகாப்பதற்காக தொண்டர்கள் வாளிகளிலும் பைகளிலும் தண்ணீரை அள்ளி அவற்றின் மீது ஊற்றினர். எனினும் 9 திமிங்கிலங்கள் இறந்துவிட்டன. ஏனைய 46 ஐயும் கடலில் கொண்டு சென்று விடுவதற்கு கடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

சில திமிங்கிலங்கள் கடுமையான முயற்சியின் பின்னர் ஆழ்கடலில் கொண்டு சென்று விடுவிக்கப்பட்டாலும், அவை மீண்டும் நீந்தி ஆழம் குறைந்த கடற்பகுதிக்கே வந்து மணலில் சிக்கிக்கொள்கின்றன என்கிறார்கள் உதவிப்பணியாளர்கள்.

கடற்கரையோரத்தில் பொழுதுபோக்க வந்த சிலரே திமிங்கிலங்கள் கரையொதுங்கியதனை முதலில் கண்டனர். அவர்கள் கொடுத்த தகவலின் அடிப்படையிலேயே உதவிப்பணியாளர்கள் அந்த இடத்துக்கு விரைந்து வந்து மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

அதுவரை சுமார் 6 மணித்தியாலங்கள் அவை ஆழம் மிகக் குறைந்த கடற் பகுதியில் சிக்கித் தவித்தன என்கின்றார்கள் நேரில் பார்த்தவர்கள்.

2000ஆம் ஆண்டு ஜூலை மாதம் நன்ருகெட் தீவின் கரையோரத்தில் இத்தகைய 10 திமிங்கிலங்கள் கரையொதுங்கின. அவை அனைத்தும் உயிரிழந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

திடீரென திமிங்கிலங்கள் இவ்வாறு கரையொதுங்குவதற்கான காரணம் என்ன என்பது குறித்து விஞ்ஞானிகள் இன்னும் தெளிவான தகவல்கள் எதனையும் தெரிவிக்கவில்லை. வழமைக்கு மாறான உணவு எதனையாவது உண்பதனால் ஏற்படும் விளைவு காரணமாக அவை இவ்வாறு கரையொதுங்கக்கூடும் என்று அவர்கள் கூறுகின்றனர். (ம)



கரையொதுங்கிய திமிங்கிலங்களை கடலுக்குள் கொண்டு சென்று விடும் முயற்சியில் உதவியாளர்கள்

# பிலிப்பைன்ஸில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படை வெளியேறுகிறது

மணிலா,ஜூலை31

பிலிப்பைன்ஸில் அந்நாட்டு இராணுவத்துக்குப் பயிற்சி அளித்து வரும் அமெரிக்கப்படையினர் இந்த வார இறுதியில் வெளியேறுவார்கள் என்று கூறப்படுகிறது.

பிரிவினை கோரிப் போராடிவரும் இஸ்லாமியத் தீவிரவாதிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளில் பிலிப்பைன்ஸ் இராணுவத்துக்கு உதவுவதற்காக கடந்த 6 மாதகாலமாக அமெரிக்கப்படையினர் அங்கு நிலைகொண்டுள்ளனர். இவர்கள் பயிற்சி அளிப்பதோடு தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் நேரடியாகவும் பங்கு கொண்டதாகக் கூறப்பட்டது.

இதேசமயம் அமெரிக்கப் படையினர் தமது நாட்டில் நிலைகொண்டிருப்பதற்கு பிலிப்பைன்ஸ் மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வந்தனர்.

இந்த நிலையிலேயே அமெரிக்கப் படையினரின் வெளியேற்ற அறிவிப்பு வெளிவந்துள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க இராணுவப் பேச்சாளர் கூறுகையில் - அதிரடிப்படையினர், பயிற்சியாளர்கள் இராணுவப் பொறியியலாளர்கள் என ஆயிரத்து 300பேர் அடங்கிய அமெரிக்க படையணி அநேகமாக நாளை வியாழக்கிழமை முதல் பிலிப்பைன்ஸை விட்டு வெளியேறத் தொடங்கும் என்று தெரிவித்தார்.



அமெரிக்கப் படையினரின் வெளியேற்றத்தையொட்டி பிலிப்பைன்ஸின் தென்புறத் தீவான ஜம்போன்காவில் உள்ள அமெரிக்கப் படை நடவடிக்கைத் தலைமையகத்தில் விழா ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்கப்படையினர் பிலிப்பைன்ஸிலிருந்து வெளியேறினாலும் அமெரிக்க இராணுவத்தின் தொடர்பு அதிகாரிகள் தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்காக தொடர்ந்து அங்கு தங்கியிருப்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் பிலிப்பைன்ஸுக்கு விஜயம் மேற்கொள்ளும் தருணத்தில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலிருந்து மாகாணமட்ட மெய்வல்லுநர் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டி தேசியமட்டப் போட்டிகளுக்குத் தகுதிபெற்றுள்ள சாதனை வீரர்களான பின்வரும் மாணவர்களைப் பெருமையுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

செல்வன் யோகநாதன் துஷிகரன் - 19 வயதின்கீழ் 800மீ, 1500மீ முதலிடங்கள்

செல்வன் குணரட்ணம் கபிலன் - 400மீ, 4 x 400மீ

செல்வன் பீற்றர் நரேந்திரன் - 4 x 400மீ

செல்வன் விமலராசா அசோ - 4 x 400மீ

செல்வன் இராமச்சந்திரன் விஷ்ணுகாந்தன் - 4 x 400மீ

இவர்களுக்குப் பயிற்சியளித்த உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்களையும் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்,
யா/நெல்லியடி ம.ம.வி.

(C/23117)


# ஐ.நா. கண்காணிப்பாளர்கள் அமெரிக்காவின் உளவாளிகள்

## ஈராக் அமைச்சர் குற்றச்சாட்டு

பக்தாத்,ஜூலை31

ஈராக்கில் தங்கியுள்ள ஐ.நா. கண்காணிப்பாளர்கள் அமெரிக்காவுக்காக உளவு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

- இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளது ஈராக்.

செய்தி நிறுவனம் ஒன்றுக்கு நேற்றுமுன்தினம் அளித்த பேட்டியில் ஈராக்கிய வெளிவிவகார அமைச்சர் நாஜி ஜப்ரி இதனைத் தெரிவித்தார்.

ஐ.நா. ஆயுதக்கண்காணிப்பாளர்கள், ஈராக் அதிபர் சதாம் ஹுசைனின் ஆட்சியை அகற்றும் அமெரிக்க முயற்சிகளுக்கு உதவுவதாகவும் -

ஈராக்கில் தாக்கப்பட வேண்டிய நிலைகள் குறித்து அமெரிக்கப் படையினருக்கு உளவுத் தகவல்களை அவர்கள் வழங்குவதாகவும்-

ஜப்ரி அப்போது குற்றஞ்சாட்டினார்.

இரசாயன மற்றும் தடைசெய்யப்பட்ட ஆயுதங்கள் ஈராக்கில் உள்ளதா? என்பதைக் கண்டறிவதற்காக ஈராக்குக்குள் வந்த ஐ.நா. ஆயுதக் கண்காணிப்பாளர்கள் அமெரிக்க, பிரிட்டிஷ் மற்றும் இஸ்ரேலிய உளவாளிகளாகச் செயற்படுகிறார்கள். இந்த உளவாளிகள் ஈராக்கில் பொதுமக்கள் மற்றும் பொருளாதார கட்டமைப்புகள், பாதுகாப்பு மற்றும் இராணுவ நிலைகள் ஆகியவை பற்றி அமெரிக்கப் புலனாய்வுத்துறைக்கு தெரிவிக்கின்றனர். ஈராக் மீது அமெரிக்கா அவ்வப்போது நடத்தும் வான் தாக்குதல்களுக்கு இந்த உளவுத் தகவல்களே காரணம்.

ஈராக்கில் சதாமின் ஆட்சியை அகற்றிவிட்டு அங்கு தமது சொற்படி ஆடக்கூடிய பொம்மை அரசொன்றை உருவாக்குவதே அமெரிக்க, பிரிட்டிஷ் அரசுகளின் கனவாகும்.

- இவ்வாறு ஜப்ரி அந்தப் பேட்டியில் தெரிவித்துள்ளார். (ஒ)

# குதிரைக்கு செயற்கைக் கால்

ரெய்ஜாவிக்,ஜூலை31

ஐஸ்லாந்து தலைநகர் ரெய்ஜாவிக்கைச் சேர்ந்தவர் ஜான் முன்ஸ. இவரிடம் பார்னடா என்ற பெயரில் 12வயதுக் குதிரை ஒன்று இருக்கிறது. கடந்த ஆண்டு இதன் ஒரு காலில் ஏற்பட்ட தசை நோய் காரணமாக அந்தக் கால் செயல் இழந்து போனது.

தனது குதிரையின் மீது மிகுந்த பாசம் கொண்ட முன்ஸ், அதனை கால்நடை மருத்துவமனையில் சேர்த்தார். அங்கு செயற்கை மூட்டு, குளம்படிகள் கொண்ட செயற்கைக் காலை அதற்குப் பொருத்தினார்கள். ஓசர் என்னும் நிறுவனம் தயாரித்த விசேட செயற்கைக் கால் குதிரைக்கு கனகச்சிதமாகப் பொருந்தியது.

செயற்கைக் கால் பொருத்திய பிறகு, அந்தக் குதிரை உற்சாகமாகப் புல் மேய்ந்து பொழுதுபோக்குகிறது. (ஒ)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

இல.39, கனகரட்ணம் வீதி, அரியாலையில் 2 பரப்புக் காணி கிணறு, வான் பயிருடன் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு: சி.யோகராசா, ஆவரங்கால் சந்தி. தொலைபேசி இல.070-212665.(6463)

### விற்பனைக்கு

250 எல்வ் கப் செற் டிவரென்சர் லான்மாஸ்ரர் நிப்லோமாக் கலப்பையும் கினிசப் பலகை, மாம்பலகை வகைகள் 2x2றீப்பை, 2x1றீப்பை யாவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.ஜெயம், ஆலடிச் சந்தி, மானிப்பாய். (6512)

நல்ல நிலையில் உள்ள CLASSI-CSL BAJAJ ஸ்கூட்டர் (மறோன கலர்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 259, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம். T.P.No.2298, 3172 (6514)

டாக்டர் பாவிக்கும் புத்தம் புதிய HERO HONDA மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை. பார்வையிடும் நேரம்: பிற்பகல் 4.30 - 7.30. தொடர்பு: Dr.J. ஆனந்தராஜா, 41, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம். (6530)

8 மாதங்கள் நிரம்பிய நல்லின ஜேர்மன் செட்பேட் அல்ஷேசன் ஆண் நாய் விற்பனைக்கு உண்டு. தடுப்பூசிகள் யாவும் கொடுக்கப்பட்டுள்ளது. தொடர்பு: 167/5, கோயில் வீதி, நல்லூர் வடக்கு. (6531)

Gold Fish பெரியது, சிறியது, ஏஞ்சல் குறா மீன்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.விஜயன்,35/1, இந்துக் கல்லூரி ஒழுங்கை, யாழ்ப்பாணம். (6532)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தஞ்செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி, வட்டக்குளம் முன்பாக, கட்டப்பிராய். (6470)

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் தினமும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (6493)

### வகுப்புகள்

விடுதலைக்குள் ஆங்கிலம், கணிதம் O/L பரீட்சையில் A,B,C பெறுபேறடையவும் Paper Class வரை தரம் 8,9,10, உட்பட Spoken English ஆங்கிலம், A/L, G.A.Q. கற்பிக்கப்படும். B.Sc., இல.85, சிவன் கோவிலடி மேற்கு வீதி, திருநெல்வேலி. (6471)

### தேவை

யாழ்நகரின் பிரதான இடங்களை அண்டிய பகுதியில் வர்த்தக நடவடிக்கைகளுக்காக ஒரு கடை உடனடியாக வாடகைக்குத் தேவை. தொடர்பு: 313, K.K.S.வீதி, யாழ்ப்பாணம்.(6468)

### மணமகள் தேவை

செவ்வாய்க் குற்றமற்றவர்களான 1968இல் பிறந்த, கேட்டை, 1970இல் பிறந்த, சதயம், 1972இல் பிறந்த, திருவாதிரை நட்சத்திரமுடைய பொறியியலாளர்களுக்கு மணமகள்கள் தேவை. உடன் தொடர்புகொள்ளவும். இ.பாஸ்கரன், திருக்குமரன் மங்கள ஏஜென்சி (மஹாலட்சுமி தேநீர்க் கடையருகில்), கே.கே.எஸ். வீதி, கொக்குவில். (6529)

1972இல் பிறந்த, தோஷமற்ற (சதய நட்சத்திரம்), லண்டன் பிரஜா உரிமையுள்ள மணமகனுக்கு உயரமுள்ள, அழகான மணமகள் தேவை. 1967, 1968, 1969, 1970, 1971 பட்டதாரி மணமகன்களுக்கும் ஆசிரியை மணப்பெண்கள் தேவை. தொடர்பு: 'கமலக கண்ணன்' திருமண சேவை, இல.720, நல்லூர், யாழ்ப்பாணம். (6504)

### ஒத்துமாறல்

அண்மையில் வழங்கப்பட்ட பட்டதாரி ஆசிரிய நியமனம் பெற்று ஊர்காவற்றுறை பாடசாலையில் பணிபுரியும் வர்த்தகப்பட்டதாரி ஆசிரியர் வவுனியா மாவட்டத்துக்கு ஒத்துமாற விரும்புகின்றார். விரும்புவர் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: இல.11, கஸ்தூரியார் லேன், யாழ்ப்பாணம். (6515)

### கட்டுரை

30-07-2002 உதயனில் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதிய கட்டுரையை வாசித்தீர்களா? சமகால வாழ்க்கையை எப்படி நாடகமாக்குவது என்பதற்கு விளக்கமாக அமைந்துள்ளது. அவரது "இலக்கியக் கட்டுரைகள்" நூலில் உள்ள "பரிசு" (6528)

## மறியற்போர் தொடர்பான கலந்துரையாடல்

எழுதுமட்டுவாழ் தெற்கு, வடக்கு, கரம்பகம், ஒட்டுவெளி, படித்த மகளிர் குடியேற்றத்திட்டம் ஆகிய பகுதிகளில் மீளக்குடியேற அனுமதிக்குமாறு கோரி எதிர்வரும் 7ஆம் திகதி புதன் கிழமை இடம்பெற உள்ள மறியற் போராட்டம் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ஆகவே, தவறாது சம்பந்தப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த அனைவரையும் கலந்துகொள்ளுமாறு எழுதுமட்டுவாழ் மக்கள் நலன் காப்பகத்தினர் வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

## கவனத்திற்கு

நல்லூர் வடக்கு (148) 314, கோயில் வீதி, ஆதனத்தின் சொந்தத்தில் பிணக்கு இருப்பதால், குறித்த ஆதனத்தைக் கொள்வனவு செய்பவர்கள் அதன் சொந்தம் பற்றி மிக நிதானமாகச் செயற்பட வேண்டும் என வேண்டப்படுகின்றனர்.

இராசா வாமதேவன்
அற்றோனி தத்துவக்காரர்
180, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(6533)

## திருமலை கோழிக் குஞ்சுகள் விநியோகம்

யாழ்ப்பாணத்திற்கு திருகோணமலையில் இருந்து கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால 2 ஆயிரம் கோழிக்குஞ்சுகள் நேற்று முன்தினம் எடுத்து வரப்பட்டன.

இக்குஞ்சுகள் யாவும் பருத்தித்துறை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினால் விற்பனை செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-180)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

வட இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறைச் சாலையில், 38 வருடங்கள் நடத்துநராகத் தமது சேவையை பயணிகள் வரவேற்புடன் விரும்பத்தக்கதாக சிறப்புடன் ஆற்றிய

### திரு.ந.இரட்ணசிங்கம்

(துன்னாலை)

அவர்கள் 28.07.2002 அன்று தமது பணியில் இருந்து ஓய்வுபெற்றார். இவரது நீண்டகால நிம்மதியான வாழ்வுக்கு எமது இனிய வாழ்த்துக்கள்.

(சி-23113) *751 தட எண் பயணிகள்.*





அனைத்து போரேரோசொப்ட் 40g கிறீமுடன்,
ரூ.20.00 பெறுமதியான போரேரோசொப்ட் சோப் இலவசம்

சந்தைப்படுத்துவோர்
PHARMCO MARKETING SERVICES (PVT) LTD.

ஏக விநியோகஸ்தர்:-
JEGHAN PHARMACY.
NO.46,2/B,HOSPITAL ROAD,
JAFFNA. TEL.021-2194,3191
(C/23115)



"WE BRING THE WORLD TO YOUR HOME"





யாழ். மக்களுக்கோர் நற்செய்தி!

15 வருட அனுபவம் மிக்க Sats-Tech நிறுவனம் தற்பொழுது செய்மதி தொலைக்காட்சி அன்ரனா மற்றும் உபகரணங்கள் என்பனவற்றை மிகக் குறைந்த விலையில் விற்பனை செய்து வருகின்றது.

எமது புதிய விலைப்பட்டியல்

| | |
|---|---|
| *8' System* | |
| 1. 8' Economic Digital Package - | Rs. 27,500.00 |
| 2. 8' Heavy Digital Package - | Rs. 30,000.00 |
| 3. 8' Advanced Digital Package - | Rs. 32,000.00 |
| *10' System* | |
| 1. 10' Economic Digital Package - | Rs. 35,000.00 |
| 2. 10' Heavy Digital Package - | Rs. 38,000.00 |
| 3. 10' Advanced Digital Package - | Rs. 42,000.00 |

- Free Instalation
- One Year full warrenty for whole System
- Advanced Reception
- Free Technical Support
- Free updating your System

குறிப்பு: கடந்த 2 வருடங்களாக யாழ்நகரில் 100இற்கு மேற்பட்ட செய்மதி தொலைக்காட்சி அன்ரனா சிஸ்டங்களை விற்பனை செய்து பராமரித்துவரும் எமது நிறுவனத்திற்கு யாழ். ஸ்ரான்லி றோட்டில் Jaffna Technical Instituteஇல் இயங்கிவந்த விற்பனைப்பிரிவு 29.07.2002 திங்கள் முதல் எமது தலைமையகத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. எமது வாடிக்கையாளர்கள் வெரும் மேற்படி நிறுவனத்துடன் செய்மதி அன்ரனா தொடர்பாக தொடர்புகொள்ள வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

*For Further Details*

SATS-TECH ENGINEER'S
182, K.K.S. Road (Near Kulappiddy Church),
Kokkuvil. *For Contact 077-710785*
(6518)



அவுஸ்திரேலியாவில் தொழிலுக்கு
இட்டுச்செல்லும் உயர்ந்தளவில் அங்கீகரிக்கப்பட்ட பட்டமொன்றை பெற விரும்புகிறீர்களா?

(6518)

- அவுஸ்திரேலியாவில் தகவல் தொழில்நுட்பம், எந்திரவியல் மற்றும் கணக்கிடுதல் ஆகியன உயர்ந்தளவில் கிராக்கியுள்ள தேர்ச்சித்துறைகளாகும்.
- பட்டமொன்றைப் பெறுவதற்காக நாம் பிரதிநிதித்துவப்படுத்தும் 6 பல்கலைக்கழகங்களில் ஒன்றைத் தெரிவுசெய்யுங்கள்.
- அவுஸ்திரேலியப் பட்டதாரியாக விளங்கும் நீங்கள் அவுஸ்திரேலியாவிலும், சர்வதேசரீதியிலும் கூட சந்தர்ப்பங்களுடன் தொழிலுக்கான பொருத்தமான விண்ணப்பதாரியாக விளங்குவீர்கள்.

உயர்தர விஞ்ஞானப் பிரிவில் (கணிதம் புறநீங்கலாக) நீங்கள் உயர்தரத்தைச் செய்திருந்தும், ஏதாவது தொழில்நுட்பப் பிரிவில் பட்டம் பெற விரும்பினால், வெறுமனே 6 மாத மேலதிகக் கற்கைகளுடன் பட்டமொன்றை நீங்கள் பெறுவதற்கு விசேட வழியொன்றை நாம் விருத்திசெய்துள்ளோம்.

சிறந்ததிலிருந்து பட்டம் பெறுங்கள்

- சிட்னி பல்கலைக்கழகம்
- மெல்பேர்ன் பல்கலைக்கழகம்
- அடிலெயிட் பல்கலைக்கழகம்
- ANU கன்பெரா
- தென் அவுஸ்திரேலியா பிளிண்டேர்ஸ் பல்கலைக்கழகம்
- தென் அவுஸ்திரேலிய பல்கலைக்கழகம்

2003 பெப்ரவரி புதுமுகத்திற்கு இப்பொழுதே விண்ணப்பியுங்கள்


மேலும் தகவலுக்கும், எமது உயர்தொழில்சார் ரீதியில் பயிற்றுவிக்கப்பட்ட அலுவலருடனான இலவச ஆலோசனைக்கும் எமது எட்லொக்கேற் அலுவலகத்தை அழையுங்கள்.

edlocate
EDUCATION AUSTRALIA

எட்லொக்கேற் (பிறைவேற்) லிமிற்றெற்
21/1, ரொஸ்மீட் பிளேஸ், கொழும்பு 07
தொலைபேசி 670748, 074 - 611718 பக்ஸ்: 074 - 790957
ஈ-மெயில்: marketing@edlocate.lk வெப்சைட்: www.edlocate.lk

(Q/23051)

# வடபகுதி மீனவர்களுக்கு அரியதோர் வாய்ப்பு!




## யமஹா அவுட்போட் மோட்டர்

தடைகள் நீக்கப்பட்டுச் சமாதான சூழ்நிலை ஏற்பட்டு வருவதால் தமது பாரம்பரிய கடற்றொழிலை மீண்டும் ஆரம்பிக்க முனையும் வடபகுதி மீனவர்களுக்குத் தரமுயர்ந்த யமஹா அவுட்போட் மோட்டர்களைப் பெற்றுக்கொடுக்க அன்று போலவே இன்றும் இந்நாட்டு மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்கும் அசோசியேட்டட் மோட்டர் லங்கா நிறுவனம் ஆயத்தமாகிறது. தூரக்கடல் தாண்டி மீன்பிடித்துப் பாதுகாப்பாக வீடு திரும்ப அருந்துணையாகும் அதிவேக யமஹா அவுட்போட் மோட்டர்கள் விரைவில் தருவிக்கப்பட இருக்கின்றன.

கடைசி நேரம் வரை காத்திருந்து ஏமாறாமல், உங்களுக்குத் தேவையான அவுட்போட் மோட்டரை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளுங்கள்.

- உயர்ந்த தொழில்நுட்பம்
- அதிவேக அதிசக்தி எஞ்ஜின்
- எரிபொருள் சிக்கனம்
- குறைந்த பராமரிப்புச் செலவு
- நீடித்த உழைப்பு

முன்கூட்டியே பதிவுசெய்வதற்கு இன்றே தொடர்புகொள்ளுங்கள்:

**YAMAHA**

**அசோசியேட்டட் மோட்டர் லங்கா நிறுவனம்**
14/ 9, ஜினரத்தன மாவத்தை, கொழும்பு 2. தொலைபேசி: 304231-2, 077-389573
அல்லது நாடெங்குமுள்ள விற்பனை முகவர்கள்

**சப்ரியா மோட்டர்ஸ்**
எஸ்.கே. வீதி,
பெற்றிக்கு முன்னால்
கற்பிட்டி.
032-60742

**புதிய சிலாபம் யமஹா சென்டர்**
சிறைச்சாலை வீதி,
சிலாபம்.
032-23003

**விஜய மரைன் சென்டர்**
தூவ சந்தி,
நீர்கொழும்பு.
031-38486

**பிரான்சிஸ் என்டர்பிரைசஸ்**
இல. 8, 2 ஆம் மாடி,
மத்திய மீன் சந்தை,
கொழும்பு 11
01-434475, 344584

**பிரான்சிஸ் என்டர்பிரைசஸ்**
பெரிய கடை
மன்னார்.
023-32135, 32424

**தாரகா மோட்டர்ஸ்**
காலி வீதி,
அளுத்கம.
074-289900

**யமஹா சேல்ஸ் சென்டர்**
118, புதிய தங்காலை வீதி,
கொட்டுவேகொடை.
மாத்தறை.
041-21739

**ரீமா என்டர்பிரைசஸ்**
இல. 82/2, திஸ்ஸ வீதி,
ஹம்பாந்தோட்டை.
047-20707

**நடுனி யமஹா சென்டர்**
வடக்கு கடல் வீதி
திருகோணமலை
026-21296, 20295

**சிறோர் பவுண்டேஷன் லிமிட்டெட்**
335, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10.
01-448040

**தனுஷ்கா மரைன்**
600, காலி வீதி,
மொரத்துடுவ, மொறட்டுவை.
01-646046

**செந்தூரான் ட்ரேடிங் கம்பனி**
338, மத்திய வீதி,
திருகோணமலை - 0263-21183

**சிப் பலஸ்**
பிரதான வீதி,
மருதமுனை,
கல்முனை.
067-29463

**ரத்னம் என்டர்பிரைசஸ்**
169, பிரதான வீதி,
முல்லைத்தீவு,
வவுனியா - 024-21832

(சி-23029) Advantage-DY6R

## கொள்ளை முயற்சியில் காசாளர் பலியானார்!

காலி, கிந்தோட்டை மர ஆலைக் கூட்டுத்தாபனத்தில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற கொள்ளை முயற்சியின்போது கூட்டுத்தாபன காசாளர் கொல்லப்பட்டார். கொள்ளையர் எறிந்த கைக்குண்டு வெடித்ததாலேயே அவர் கொல்லப்பட்டார்.

குண்டு வெடிப்பில் காயமடைந்த கூட்டுத்தாபன ஊழியர்கள் இருவர் கராப்பிட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். (ம)

# பணப் பரிமாற்றத்துக்கு செலான் வங்கியில் இலகுவழி

## முகாமையாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை31

வெளிநாடுகளில் வசிப்போரால் தமது உறவினர்களுக்கு அங்குள்ள செலான் வங்கியூடாக அனுப்பிவைக்கும் பணத்தை இங்கு மிகவும் சொற்ப நேரத்தில் சம்பந்தப்பட்டவர்கள் பெற்றுக்கொள்ளமுடியும் என்று வங்கியின் யாழ்.கிளை முகாமையாளர் கே.கனகசுந்தரம் தெரிவித்துள்ளார்.

பணத்தை வங்கியூடாக அனுப்பிவிட்டு வங்கியால் வழங்கப்படும் இலக்கத்தை தமது உறவினர்களுக்கு தொலைபேசி மூலமோ அல்லது தொலைநகல் (பக்ஸ்) மூலமோ தெரியப்படுத்தினால் அவர்கள் அந்த இலக்கத்தை வங்கியால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டு பூர்த்திசெய்து வழங்கியவுடனேயே உரியவரிடம் பணத்தை வழங்கமுடியும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சாதாரணமாக இதற்கு 20 நிமிடங்கள் போதும் எனவும் -

தொலைபேசி வசதிகள் சீராக இருந்தால் 5 நிமிடத்திலேயே பணத்தைத் தம்மால் வழங்கமுடியும் எனவும் - அவரவரின் வதிவிடம் மற்றும் பிரயாணத் தூரத்திற்கமைய நேரம் வித்தியாசப்படும் என்றும் - அவர் மேலும் குறிப்பிட்டார். (உ-10-180)

## ஆனந்தன்வடலி ஒழுங்கை திறப்பு

கொழும்புத்துறை,ஜூலை31

கொழும்புத்துறை ஆனந்தன் வடலி வீதியின் 3ஆம் ஒழுங்கைக்கும் ரயில்வே கடவைக்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ள வீதி மக்கள் பாவனைக்கு கடந்த சனிக்கிழமை முதல் திறந்து விடப்பட்டுள்ளது.

2000ஆம் ஆண்டுமுதல் இப்பகுதியில் முகாம் அமைத்திருந்த படையினர் இவ்வீதியை பொதுப் பாவனைக்குத் தடைசெய்திருந்தனர். தற்போது அப்பகுதியில் மக்கள் மீளக் குடிமர்ந்து வருவதை அடுத்து இவ்வீதி பொதுப்பாவனைக்குத் திறந்து விடப்பட்டுள்ளது. ஆனால் படைமுகாம் அப்பகுதியில் தொடர்ந்து இருந்து வருகின்றது.

அதேவேளை, கொழும்புத்துறை துண்டிச் சந்தியில் புதிய சோதனைச் சாவடி ஒன்றும் அமைக்கப்பட்டு வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (ஒ-ரி)



உ

## காரைநகர் சிவன் கோயில்

(ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானம்)

## வருடாந்த தேவி மஹோற்சவம் 2002

**சிவநேயச் செல்வர்களே!**

*நிகழும் சித்திரபானு வருடம் ஆடிமாதம் 17ஆம் திகதி (02.08.2002) வெள்ளிக்கிழமை வருடாந்த மஹோற்சவம் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத்தினங்கள் சிறப்பாக நடைபெற திருவருள் பாலித்துள்ளது. அத்தருணம் அடியார்கள் யாவரும் பெரும் திரளாக வருகைதந்து மஹோற்சவத்தைக் கண்டுகளித்து தேவியை வணங்கி இஷ்டசித்திகளைப் பெற்றேகுக.*

### மஹோற்சவ கிரியை விவரம்

**02.08.2002 சித்திரபானு வருடம் ஆடிமாதம் 17ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

காலை 10 மணிக்கு கொடியேற்றம் அதனைத் தொடர்ந்து அம்பாள் இடபவாகனத்தில் திருவீதி உலா வருதல்.

**05.08.2002 ஆடிமாதம் 20ஆம் நாள் திங்கட்கிழமை**

மாலை 6 மணிக்கு கைலாயவாகனத்தில் சுவாமி திருவீதி உலா வருதல்.

**10.08.2002 ஆடிமாதம் 25ஆம் நாள் சனிக்கிழமை**

தேர்த்திருவிழா காலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் 8.30 மணிக்கு அம்பாள் தேரிலே எழுந்தருளும் காட்சியும் இடம்பெறும்.

**11.08.2002 ஆடிமாதம் 26ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை**

காலை 07 மணிக்கு பூரகர்மம் (ருதுசாந்தி) அம்பாளுக்கு நடைபெறும். 9 மணிக்கு வசந்த மண்டபப் பூசை தீர்த்தோற்சவமும் மாலை 7.00 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெறும்.

*தினமும் காலை 8 மணிக்கு பகல் உற்சவமும் மாலை 4 மணிக்கு இரவு உற்சவமும் ஆரம்பமாகும். திருவிழா நடைபெறும் பத்துத் தினங்களும் அன்னதான மடத்தில் மாகேஸ்வரபூசை இடம்பெறும்.*

☞ இதில் குறிப்பிட்டுள்ள நேரங்கள் அனைத்தும் பழைய நேரம் என்பதைக் கவனத்திற்கொள்ளவும்.

குறிப்பு: தினசரி காலை 8.15மணிக்கு யாழ்.பேருந்து நிலையத்திலிருந்தும் பிற்பகல் 2.00 மணிக்கு ஆலயத்திலிருந்தும் கொடியேற்றம், ஆடி அமாவாசை, ரதோற்சவத்திற்கும் தீர்த்தோற்சவத்திற்கும் வழமையான சேவையுடன் மேலதிக சேவையும் நடைபெறும். (புதிய நேரம்)

ஆலயத்திற்கு வரும் அடியவர்கள் பூ, மாலைகள், இளநீர், பால், தயிர் மற்றும் அபிஷேகப் பொருள்களைக் கொண்டுவரவும்.

(C/23111)

**ஆலய தர்மகர்த்தாக்கள்:**

காரைநகர். ஆ.அம்பலவிமுருகன், மு.சுந்தரலிங்கம்.

## ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்



### திருமதி சத்தீஸ்வரி கனகரத்தினம்

**திதி: 31-07-2002**

*அம்மா!*

*எம்மை நடுவழியில் விட்டு நீங்கள்*
*தனியே சென்றதேனோ?*
*உங்கள் இழப்பால் நாம் படும் துயர் அளப்பரியது!*
*உங்களுடைய ஆத்மா சாந்தியடைய*
*பிரார்த்திக்கின்றோம்.*

*சி.கனகரத்தினம்,*
*"கதிர்வேலவன்" அரிசியாலை,*
*கைதடி கிழக்கு, கைதடி.* (6525)

**கணவன், பிள்ளைகள், உறவினர்கள்.**

## 14ஆவது விண்ணக வாழ்வின் நிறைவில்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 20 | 31 |
| 10 | 07 |
| 1969 | 1988 |

### செல்வி ஜெயந்தி ஜெயரட்ணம்

*(உடுவில் மகளிர் கல்லூரி முன்னாள் A/L மாணவி)*

புன்னகை தவழும் பூ முகத்துடன்
பூத்துக் குலுங்கிய நம் வீட்டு மலரே!
இன்பமாக எம்முடன் உலாவந்த
இனிய நாள்களை எப்படி மறப்போம்?

உன் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா,
அண்ணாமார், அண்ணிமார்.

*இராமலிங்கம் வீதி,*
*உடுவில்.* (6509)


விலை 14/=




# சுடர் ஒளி

## 30.07.2002 இதழில்

★ கடந்த காலத்தை மறந்து களைகட்டும் யாழ்.நகர்

★ நாடாளுமன்றக் கூட்டத்தொடரை இடைநிறுத்த ஜனாதிபதி முயலுவாரா?

★ *ஆசிரிய தலையங்கம்* : சமாதானத்துக்கு எதிரான சதி

★ மிலிந்த - பாலா சந்திப்பு மற்றும் ஒரு திருப்பம்

★ வரலாற்றில் விடுபடமுடியாத சிங்கக்கொடி எதிர்ப்புப் போர்

★ கம்பிகளுக்குப் பின்னால் காலம் கடத்தும் தமிழ் அரசியல் கைதிகள்

★ *தேரடி அரட்டை* : தலைமைக் கதிரை வேண்டுமானால் தலைமைத்துவப் பண்பும் வேண்டும்

★ ஜனாதிபதி - அமைச்சர்கள் விரிசல் மேலும் அதிகரிப்பு

மற்றும் சுவையான அம்சங்கள்

(C/23114)

சுடர் ஒளி வாரப்பத்திரிகையின் விலை 3ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது
உங்கள் முகவரிடம் கேட்டுவாங்குங்கள்.

சுன்னாகம்

# கதிரமலைச்சிவன் தேவஸ்தான ஆடிப்பூர மகோற்சவ விஞ்ஞாபனம்

அடியார்களே!

நிகழும் மங்களகரமான ஆடிமாதம் 17 ஆம் நாள் (02.08.02) வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு சொர்ணாம்பிகா தேவியின் ஆடிப்பூர மகோற்சவம், கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

| | | | | |
|---|---|---|---|---|
| கொடியேற்றம் | 02.08.02 | வெள்ளிக்கிழமை | காலை | 10 மணி. |
| மங்கலத்திருவிழா | 07.08.02 | புதன்கிழமை | மாலை | 3 மணி. |
| கப்பல்திருவிழா | 08.08.02 | வியாழக்கிழமை | மாலை | 5மணி. |
| சப்பறத்திருவிழா | 09.08.02 | வெள்ளிக்கிழமை | மாலை | 6 மணி. |
| தேர்த்திருவிழா | 10.08.02 | சனிக்கிழமை | மாலை | 6 மணி. |

அடியார்கள் அனைவரும் மகோற்சவத்தை தரிசித்து சொர்ணாம்பிகாதேவி சமேத பொன்னம்பலவாணப் பெருமானின் அருளைப் பெறுக.

கதிரமலைச்சிவன் கோயில்,
சுன்னாகம். (C/23119) - தேவஸ்தானத்தினர்.

# யாழ்ப்பாணக் கல்வி நிலையம்

**The Jaffna Education Centre**

(சாந்தி சினிமா முன்பாக மேல்மாடியில்)

**Spoken English, "சிங்களம்"**

ஆகிய பாடங்கள் இலகுவில் எழுத, வாசிக்க கதைக்கக் கற்றுக்கொடுக்கப்படும். அத்துடன்

**Shorthand Typing** ஆகிய பாடங்கள் இருமொழிகள் மூலமும் கற்பிக்கப்படுகின்றன. *புதிய பிரிவு ஆரம்பம்: 01.08.2002*

(6523) நிர்வாகி: இ. லோகநாயகி

# ஈராண்டு நினைவலைகள்



அமரர்

**அம்பலவாணர் குலசேகரம் J.P.**

(இளைப்பாறிய நூலகர்,
சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி -
உறுப்பினர், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி)

இதயம் உள்ளவரை தொடரும்
- உங்கள் நினைவலைகள் தினமும்
உதயம் அத்தனையும் மலரும் உங்கள்
- முகம் அப்பா!

- குடும்பத்தினர்.
...டி வீதி, கைதடி நுணாவில்,
...ம். (6540) சாவகச்சேரி.

# ...றித் திருப்பலி அழைப்பு

மிருசுவில் புனித நீக்கொலஸ் திருப்பதியின்
சீர்மிகு ஒன்பதாவது குருமகன்
திரு. ம. மரியகொலன் ஞானேந்திரன் அவர்கள்
...ப்பெயர்வால் இன்னல் பலவுற்று
...நிலை நோக்கித்தடம் பதிக்கும் தன் சொந்த மண்ணில்
...வனுக்கு நன்றி செலுத்தி ஒப்புக் கொடுக்கும்
...திருப்பலி தனில் கலந்து, அடிகளாரை
...ரவேற்க அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
...டம்: புனித நீக்கொலஸ் ஆலயம், மிருசுவில்.
...லம்: 2002.08.03 (சனிக்கிழமை) காலை 9.30மணி

தங்கள் வரவில் மகிழ்வுறும்,
பங்குத்தந்தையும்,பங்கு மக்களும்,
புனித நீக்கொலஸ் ஆலயம், மிருசுவில்.

# ...ஆவது அகவையில் எம் நெஞ்சம் நெகிழ்ந்த கண்ணீர்ப் பூக்கள்

தோற்றம்
31
.
07
.
1989



மறைவு
11
.
12
.
2001

## செல்வி சந்திரசேகர் பிரதீபா

(தரம்6 மாணவி, யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி)

மகளே! தீபா இன்று உன் பிறந்த தினம்

கண் இமைக்க மறந்தாலும்
உன் நினைப்பு மறக்கவில்லை
கண்மணியே எங்கு சென்றாய்?
கவலை தனை ஏன் கொடுத்தாய்?
ஊனும் உயிரும் உன் நினைப்பால்
உருகித் தவிக்கிறதே தீபா!
எம் விட்டுத் தூண்டா மணிவிளக்கே!
நீ அணைந்ததனால் எம்வீடு
இருண்டு போனதுவே தீபா!
ஒளி கொடுக்க எழுந்தோடி வாராயோ?

...பண்ணை வீதி, பிரிவால் துயருறும்:
...லி. (6539) குடும்பத்தினர்.

# மாணவர் அமைப்பு செயலாளர் கடத்தல்!

கொழும்பு,ஜுலை31

தாய் நாட்டைக் காக்கும் மாணவர் அமைப்பின் செயலாளரான வண. அளுத்கமகே ரத்னஜோதி நேற்றுமுன்தினம் இனந்தெரியாத சிலரால் கடத்தப்பட்டார் என்று அந்த மாணவர் அமைப்பு கூறுகின்றது.

இன்று கொழும்பில் அரசுக்கு எதிராக நடைபெறும் ஆர்ப்பாட்டம் குறித்து விளக்குவதற்காக அவர் சென்றுகொண்டிருந்த பொழுது கடத்தப்பட்டார் என்று கூறப்பட்டது.

இது குறித்து தாங்கள் பேலியாகொட பொலிஸில் முறையிட்டிருப்பதாகவும் மாணவர் அமைப்பினர் கூறினர்.

வண.ரத்ன ஜோதியைக் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் நாளைமுதல் சகல பல்கலைக்கழகங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படும் என்று அந்த அமைப்பினர் அறிவித்திருக்கின்றனர்.

அரசுக்கு எதிராக மாணவர்களை தூண்டுவதில் ரத்னஜோதி ஈடுபட்டிருக்கின்றார் என்று குற்றஞ்சாட்டப் பட்டிருந்தார்.

(ஐ-9)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜுலை31

யாழ்.கல்வி வலயத்துக்கு உட்பட்ட மக்கள் நலன்புரிச் சங்கப் படையணித் தொண்டர்களுக்கான நல்லூர் உற்சவக் கடமை தொடர்பான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

(ஐ-3)

# பிரதமர் கூட்டமைப்பு சந்திப்பு

கொழும்பு,ஜுலை31

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தமிழ் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையிலான சந்திப்பு நாளை வியாழக்கிழமை மாலை 5.00மணிக்கு அலரி மாளிகையில் இடம்பெறவுள்ளது.

இச்சந்திப்பு நேற்று இடம்பெறுவதாக இருந்தது. எனினும் பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பின் இலங்கை விஜயம் காரணமாக இந்தச் சந்திப்பு நாளைவரை ஒத்திவைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3)

# பரீட்சை சுட்டெண்

சாவகச்சேரி,ஜுலை31

தரம்5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இருந்து விண்ணப்பித்த மாணவர்கள் தமது பரீட்சைக்கான சுட்டெண்களை எதிர்வரும் 3ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30மணி தொடக்கம் பிற்பகல் 1.00 மணிக்கும் இடையில் கல்லூரியில் பெற்றுக் கொள்ளலாம் என கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார்.

(ஐ-3)


தட்டெழுத்து வேலைகள் தெரிந்த பெண் பிள்ளைகள்

**தேவை**

☆டைப்பிங் வேகம் அவசியம்.
☆கணனி அறிவு முக்கியமில்லை.
உடன் தொடர்புகொள்க:

**S.T.R**
கொமினிகேசன் &
கொம்பியூட்டர் சேவிஸ்
81, பலாலி றோட், கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (6545)


லக்ஷ்மி இணுவில்.
CAMERON Dia2 - Lorella
CHARLIES ANGELS
காட்சிகள் 10.30, 1.30, 4.30 (ப.நே.)

ராஜா சுன்னாகம்
குணால், தருண், ஸ்நேகா,
பிரீதா, தாமு நடித்த
புன்னகைதேசம்
காட்சிகள்: 11.00, 3.00 (ப.நே.)


# 38ஆம் நாள் நினைவஞ்சலியும்

நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு
05
-
06
-
1969



உதிர்வு
24
-
06
-
2002

## அமரர் தம்பிஜயா முருகானந்தன்

*(இரசாயனவியல் ஆசிரியர், வெஸ்லிக் கல்லூரி, கொழும்பு)*

*அன்னையாய் ஆசிரியனாய் ஆசைமாமாவாய்*
*எல்லோரும் விரும்பும் இளைஞனாயிருந்தாய் – இடைவழியில்*
*சொல்லாமல் எமைவிட்டு சொர்க்கம் சென்றாலும்*
*நில்லாமல் போகாதுன் நினைவு!*

அன்னார் அமரத்துவம் அடைந்த செய்திகேட்டு வந்து எமது துயரில் கலந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், தொலைபேசி, தொலைநகல், அஞ்சல்மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், இறுதிக்கிரியைகளின்போது உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (31.07.2002) புதன்கிழமை பம்பலப்பிட்டி, அரச தொடர்மாடி கலாசார மண்டபத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பிரிவால் துயருறும்:*
குடும்பத்தினர்.

*M.30, அரச தொடர்மாடி, பம்பலப்பிட்டி.* (6453) *பழைய பாடசாலை வீதி, கல்வயல், சாவகச்சேரி.*

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஈஸ்வரானந்தன் சிவபாக்கியம்

உடுவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஈஸ்வரானந்தன் சிவபாக்கியம் 30.07.2002 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - சிந்தாமணி ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி - இலட்சுமிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஈஸ்வரானந்தனின் (சிறைச்சாலை ஓவசியர்) அன்பு மனைவியும், விஜயேந்திரன் (சுவீடன்), ஜமுனா (சுவிஸ்) ஆகியோரின் அருமைத் தாயாரும் கீதா (சுவீடன்), குகசீலன் (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்ற இரத்தினம், காலஞ்சென்ற கந்தையா, மகேஸ்வரி, வன்னியசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் அருபி, ஆர்வின்கன் (சுவீடன்), அஞ்சனா, ஆதிரையன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (31.07.2002) புதன்கிழமை பி.ப. 2.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் மாளிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*புளியடி வைரவர் கோயிலடி, உடுவில்.* (C/23121) தகவல்: ஜமுனா (மகள்)

## செல்வன் கனகநாயகம் ஜெயபிரகாஸ்

புதுக்கலட்டி, அல்வாய் கிழக்கைச் சேர்ந்த கனகநாயகம் ஜெயபிரகாஸ் அவர்கள் 29.07.2002 திங்கட்கிழமையன்று அகால மரணமானார்.

அன்னார் கனகநாயகம் - தவமணிதேவியின் பாசமிகு புத்திரனும் ஜெயசிறி, ஜெயமதி, ஜெயகரன், ஜெயதாஸ், ஜெயகவிதா, ஜெயதமினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் நஞ்சன், கனேசராஜா ஆகியோரது மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.07.2002) புதன்கிழமை மு.ப. 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மடத்தடி, கருகம்பன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புதுக்கலட்டி, அல்வாய் கிழக்கு, அல்வாய்* (C/23122) தகவல்: க.ஜெயதாஸ் (சகோதரன்)

## வெலிச்சோர் யக்கோமுத்து

சென்ஜேம்ஸ் வீதி, சில்லாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட வெலிச்சோர் யக்கோமுத்து அவர்கள் நேற்று (30.07.2002) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பௌர்னபேத் (பூவம்மா) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற செல்வம் மற்றும் மலர் (சில்லாலை), ராணி (பிரான்ஸ்), அன்ரன் (ஜேர்மனி), வின்சன் (சுவிஸ்), கிறேசியன் (சுவிஸ்), டொமினிக்சன், றஞ்சன் (சுவிஸ்), செல்வதி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*சென்.ஜேம்ஸ் வீதி, சில்லாலை.* (6548) தகவல்: கிருபராசா (மருமகன்)

## பண்டாரி வேலன்

கைதடி மேற்கைச் சேர்ந்த பண்டாரி வேலன் அவர்கள் 28.07.2002 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.07.02) புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் ஊரியான் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தோப்பையூர், கைதடி மேற்கு.* (C/23123) தகவல்: ப.செல்லத்துரை (அதிபர்) (சகோதரர்)

# ரத்வத்தை சகோதரர்களுக்கு நீதிமன்றம் பிணை அனுமதி

கொழும்பு,ஜூலை31

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையின் புதல்வர்களான லொஹான் ரத்வத்தை, சானுக ரத்வத்தை ஆகியோரைப் பிணையில்விட மேன் முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவு வழங்கியது.

இந்த உத்தரவை மேன்முறையீட்டு நீதியரசர்களான நிஹால் ஜயசிங்க, ஸ்ரீபவன் ஆகியோர் வழங்கினர்.

மனுதாரர்களின் சார்பில் ஆஜரான சட்டத்தரணியின் நீண்ட விவாதத்திற்குப் பின் அவரது வாதங்களை ஏற்றுக்கொண்டு நீதியரசர்கள் மேற்படி தீர்ப்பை வழங்கினர்.

ஒரு லட்சம் ரூபா காசுப் பிணையிலும், சமூகத்தில் அந்தஸ்து பெற்ற இருவர் மற்றும் நெருங்கிய உறவினர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் ஆகியோரின் சரீரப் பிணையிலும் ரத்வத்தை சகோதரர்கள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

வாரத்தின் ஒவ்வொரு புதன் கிழமையும் மனுதாரர்கள் இரகசியப் பொலீஸ் பிரிவில் சென்று கைச்சாத்திட வேண்டுமென்றும் நீதியரசர்கள் உத்தரவிட்டனர்.

கண்டி மடவெல, உடதலவின்னவில் இடம்பெற்ற 10 முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். தெல்தெனிய நீதிமன்றத்தில் பூர்வாங்க வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

தெல்தெனிய நீதிமன்ற நீதிபதி இவர்களுக்கு பிணை வழங்க மறுத்ததைத் தொடர்ந்து கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் பிணை மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு மீதான விசாரணை நேற்று மேன்முறையீட்டு நீதியரசர்கள் நிஹால் ஜயசிங்க, ஸ்ரீபவன் ஆகியோர் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. (ஐ)

## 100 முச்சக்கர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முச்சக்கர வண்டிகளை வன்னியில் சம்பந்தப்பட்டோரிடம் ஒப்படைப்பதற்கு அமைச்சர் ஜயலத் ஜயவர்தனா பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவ்வைபவத்தில் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரத்ன, இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் ஆகியோரும் பங்குபற்றினர். (ஐ)

## ஆசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கழும், 'சக்தி எவ்.எம்' வானொலியும் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளன.

சுகததாச ஸ்ரேடியத்தில் இடம்பெறவுள்ள ஆரம்ப நிகழ்வில் விளையாட்டு வீரர்களான என்எதிர்வீரசிங்கம், சுசந்திகா ஜயசிங்க ஆகியோர் ஒலிம்பிக் தீபத்தை ஏற்றவிருக்கின்றனர்.

எதிர்வீரசிங்கத்தின் சொந்த இடமான யாழ்ப்பாணத்தில் இருந்து ஒலிம்பிக் தீபம் எடுத்துச் செல்லவேண்டும எனப் பலரும் விரும்பிய காரணத்தால், இன்று ஒலிம்பிக் தீபம் இங்கிருந்து கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.(ஐ-3)

## எழுவைதீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

11 மணியளவில் 'சமுத்திராதேவி' படகு மூலம் எழுவைதீவு இறங்குதுறையை சென்றடைந்தனர்.

இறங்குதுறையில் வைத்துப் போராளிகளை வரவேற்கப் பொதுமக்கள் முண்டியடித்தனர். கட்டுக்கடங்காத மக்கள் கூட்டத்தைத் தடுத்து நிறுத்த கடற்படையினர் முயன்றபோது அங்கு கடற்படையினருக்கும் பொதுமக்களுக்கும் இடையே வாக்குவாதம் எழுந்தது. பின்னர் கடற்படையினர் மக்களை இறங்குதுறைப் பகுதிக்கு அனுமதித்தனர். இறங்குதுறையில் வெடிகள் கொளுத்தி மக்கள் உணர்வுபூர்வமாக போராளிகளைக் கட்டி அணைத்து வரவேற்றனர். பின்னர் அங்கிருந்து போராளிகள் ஊர்வலமாக எழுவைதீவு றோ.க. த.க.பாடசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு நடந்த வரவேற்புக் கூட்டதில் மாவீரர்களான கதிரவன், விமல், பிரியன், டோக்கின், பிரளயன் ஆகியோரது பெற்றோர் ஈகச்சுடரேற்றினர். பலர் உரையாற்றினர்.(ஐ-16)

## வெற்றிலைக்கேணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் மீது டோறா படகில் வந்ததாகக் கூறப்படும் கடற்படையினர் தாக்குதல் நடத்தியதுடன் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்ததாகவும் -

இத்தாக்குதலில் மீனவர் படகு ஒன்றுக்கு சிறுசேதம் ஏற்பட்டது என்றும்-

அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த முறைப்பாட்டை அடுத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை கண்காணிப்புக் குழுவின் யாழ்.அலுவலக அதிகாரிகள் நேரடியாக வெற்றிலைக் கேணிக்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். இந்த விசாரணைகளில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பிரமுகர் புலித்தேவனும் கலந்துகொண்டார்.

தொடர்ந்து விசாரணைகள் நடைபெறுவதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## மந்திரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

[illegible]லை நான் இருப்பதில்லை.

எனக்கு பணமோ, அதிகாரமோ பெரிதல்ல. எனது அரசியல் அந்தஸ்தை உயர்த்திக்கொள்ள பணமோ, அதிகாரமோ எனக்குத் தேவையில்லை.

ஐதேகட்சியினர் முன்னைய 17 வருடகால ஆட்சியில் மேற்கொண்ட அதே அட்டூழியங்களை இப்போது மீண்டும் ஆரம்பித்துள்ளனர்.

இவை குறித்துக் கேள்வி எழுப்பினால் அமைச்சரவையில் என்னைக கெட்டவார்த்தைகளால் திட்டுகிறார்கள். அமைச்சரவையில் 32 ஆணகள் என்னைச் சூழ இருக்கிறார்கள் அவர்கள் அனைவரும் நான் முன்னர் குறிப்பிட்ட மாதிரியானவர்கள் அல்ல, நான்கு பேர் மட்டுமே அவ்வாறானவர்கள் என்று ஜனாதிபதி அங்கு கூறினார். (ஐ3)

## பாக்...

(முதலாம் பக்கத்

தரைப்பக்க வழி பிற்ப முதல் 5 மணி வரை ருக்கும்.

இன்று மாலை பிரதமர் ந பாதுகாப்பு அமைச்சர் மா னும் ஹில்டன் ஹோட்டல் திபதி முஷாரப் பேச்சு ந

இன்றிரவு ஜனாதிபதி மா ஜனாதிபதி சந்திரிகா பா பதிக்கு விருந்துபசாரம் வழ

நாளை காலை ஸ்ரீலங்கா மு காங்கிரஸ் தலைவர் ரவூப் முடன் முஷாரப் பேசுவார்.

முற்பகல் 11 மணிக்கு பதி முஷாரப்பும் பிரதமர் அலரிமாளிகையில் சந்தித் தரப்பு பேச்சுக்களை நடத்துவர். பகல் ஒரு மணியளில் பாகிஸ்த ஜனாதிபதி நாடு திரு தானில் ஜெனரல் கொல்ல மேற்கொள் கள் காரணமாக அ தலான பாதுகாப்பு வழங்கப்படுகின்றது.

## தங்கவடிவேல்.

(முதலாம் பக்கத் தொ

சம்பவம் பற்றி தெரியவ வது:-

திங்கள் இரவு 11.30 ம வில் 15பேர் கொண்ட கும்பல் துப்பாக்கிகள், கோடரி, கம்புக தம் ஆரையம்பதி, ஊர் வீதியி எம்.பியின் இல்லத்தினுள் நுழை முயன்றுள்ளனர். முதலில் வீட்டிற் முன்னாள் நிறுத்திவைக்கப்பட்டிருந் எம்.பியின் சாரதியான சிவசுந் பவருக்குச் சொந்தமான வான் களால் அடித்து நொறுக்கப்ப

பின்னர் வீட்டிற்குள் நு முயன்றனராம். பாதுகாவலர்க பாக்கிப் பிரயோகம் செய்யவே கள் காயமடைந்தனர்.

தாக்குதல் நடந்த சமய வட்டிலிருந்தார். அவரது வீ ஒரு மாதத்திற்குள் நட இரண்டாவது தாக்குதல் இ

காத்தான்குடி பொலீஸ் 'விசாரணைகளை நடத்தி னர். பொலீஸ் பாதுகாப்பு கப்பட்டுள்ளது.

காயற்றிற்குள்ளான கள் ஆரையம்பதி ம கிராமங்களைச் சே தெரியவருகிறது.

தனிப்பட்ட பகை தலுக்குக் காரணம என்றும் கூறப்படுகி

காயமடைந்தவ ரின் நிலை கவலைக தாக வைத்தியசாலை தெரிவித்தன.

ஆரையம்பதியை யோகசிறி, சா.நவரா, ராஜ், ப.சுதாகர், கே.சு பவளராஜ் ஆகியோரே வர்களாவர்.

பாதிக்கப்பட்ட தரப் வலின்படி அலுவலகம் பதற்காக வீடு ஒன்றில செய்ததாகவும், அந்த எடுக்கச்சென்ற ப.சுத தாக்கப்பட்டதாகவும் அவ விக்கச்சென்றபோதே அவ துப்பாக்கிப் பிரயோகம் பட்டதாகவும் தெரியவரு


324,பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகே, மேல்மாடியில்)

MOBILE NET MCS COMPUTER SERVICES

BIT புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

A/L பரீட்சை முடிவுகளிற்கேற்ப சலுகைகள்

பதிவுகள் 01-08-2002இற்கு முன்னர் நேரில்



இன்று மாலை உங்களை எதிர்பார்க்கின்றோம்

சமாதானக் குரல்

மாபெரு[illegible] இன்னிசை நற்செய்திப் பெருவிழா

உ[illegible]களுடன்

அனுமதி இலவசம்

தந்தை S.J.பெ[illegible]கமான்ஸ் அவர்கள்

துரையப்பா விளையாட்ட[illegible]ங்கில் மாலை 4 மணி

இயேசு கிறிஸ்துவி[illegible] உங்களுக்கு சமாதானமும், சந்தே[illegible]மும், விடுதலையும் கொண்டுவரும் நிகழ்விற்[illegible] யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.



தொடர்பு:

(6064) மனதுருக்கம் இலங்கை, 021-3286.


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி அழைப்பு



## பொ. சங்கரப்பிள்ளை (ஜே.பி)

(முன்னாள் அதிபர், யா/ உடுத்துறை மகா வித்தியாலயம்)

திதி:- 31.07.2002 ஸப்தமி

மண் மகிழ 01-07-1938

கண் நெகிழ 11-08-2001

இமயமாய் நின்றுயர்ந்து எமக்கு ஆத்மபலத்தையும், அன்பான நேசிப்பையும் ஈந்து, கண்ணின் மணிகளாக எம்மைக் காத்துவந்த எங்கள் குடும்பத் தெய்வத்தின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு இன்று புதன் கிழமை (31.07. 2002) காலை எமது தற்காலிக வதிவிடத்தில் அனுஷ்டிக்கப்படுகின்றது.

எங்கள் அன்புக்குரியோர் அனைவரையும் இன்று (31.07.2002) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் நிகழும் அன்னாரின் ஆத்மசாந்திக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொண்டு ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்குமாறு வாஞ்சையுடன் அழைக்கின்றோம்.

அன்புடன்,
மனைவி திருமதி பு.சங்கரப்பிள்ளை
(ஓய்வுபெற்ற ஆசிரியை)
குடும்பத்தினர்.

நிரந்தர முகவரி:-
உடுத்துறை, தெற்கு,
தாளையடி

(6491)

தற்காலிக முகவரி:-
வெல்லப்பிட்டி,
புலோலி தெற்கு, புலோலி


BIT

விரிவுரைகள் ஆ

BIT பட்டக்கல்விக்கு யாண்டு 2002/2003 பரீட்சையில் தெரிவு ப்பட்ட மாணவர்க Semester 1 இற்கா ரைகள் 03/08/20 கிழமை பகல் 1 ஆரம்பமாக இ மேற்படி கற்கை பயில இருக்கும் மாணவர்களையும் ந்து கொள்ளுமாறு படுகின்றீர்கள்.

இப்பக்குதி IIS - ம


இப்பத்திரிகை நியூ உதயன்-பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.07.2002 வெளியிடப்பெற்றது.